Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 21 (24.05.2003) சனிக்கிழமை இதழ்: 232

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(சி-888)

# இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு;

# நோர்வே, ஜப்பானிடம் ஆலோசனை!

## அரசாங்கத் தரப்பு வேண்டுகோள் விடுத்தது

(கொழும்பு)

**விடுதலைப் புலிகள் கோரியுள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை, எவ்வாறு உருவாக்குவது என்பது குறித்து ஆலோசனைகளை வழங்கு மாறு - ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகளிடம் அரசாங்கம் வேண்டுகோள் விடுத்திருப்பதாகத் தெரியவருகின்றது.**

அத்துடன், விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கை தொடர்பாக, இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்காக, கொழும்பு வருமாறு - ஜப்பானிய, நோர்வே இராஜதந்திரிகளுக்கு அரசாங்கம் அழைப்பு விடுத்திருப்பதாகவும் அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அனுப்பிய கடிதம் குறித்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அமைச்சர்களும் விரிவாக ஆராய்ந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

தகுந்த காலத்துக்கு முன்னதாகவே, புலிகள் இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை முன்வைத்துள்ளதாக அரசதரப்புக் கருதினாலும், இக்கோரிக்கையை அது நிராகரிக்கவில்லை எனவும் அரசாங்கத்துக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

## கனேடியத் தூதுவருடன் கேணல் கருணா சந்திப்பு!



விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா அம்மானுக்கும் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் திருமதி பலேரி றேமன்ட்டுக்கும் இடையில் நேற்று சிநேகபூர்வ சந்திப்பொன்று நடைபெற்றது.

மட்டக்களப்பில், தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கரடியனாற்றில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில், நேற்றுப் பிற்பகல் 3.50 மணி முதல் 5.10 வரை இச்சிநேகபூர்வ சந்திப்பு இடம் பெற்றது.

இச்சந்திப்பில், தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் மூத்த தளபதி கேணல் கருணா அம்மானுடன் சிறப்புத் தளபதி ரமேஸ், அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மகளிர் சிறப்புத் தளபதி நிலாவினி, கல்விப் பகுதிப் பொறுப்பாளர் வரதன் ஆகியோரும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கோரிக்கை கடினமானாலும் சமாதான முயற்சி தொடரும்!

### நிர்வாகசபை குறித்து அமைச்சர் பீரிஸ்



விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக, அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும், இந்தக் கோரிக்கை கடினமானாலும் அதனைச் சமாளித்து, சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுமென அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று, கண்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது, அவர் இதனைத் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டராசிரியர் நியமனம் திறைசேரி அனுமதித்தது!

வடக்கு - கிழக்கில் உள்ள தொண்டர் ஆசிரியர்களின் நியமனங்களுக்கான திறைசேரி அனுமதி கிடைத்துள்ளதாக, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனங்கள் கிடைக்கவுள்ளன.

ஏற்கனவே, ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு அமைச்சரவை முடிவு செய்தபோதிலும், திறைசேரி - அதற்கான நியமனங்கள் வழங்குவதைத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாக கோரிக்கை;

## விண்ணாணம் விநாசியர்



## காரைநகர் கடற்படை சிப்பாய் விடுதலைப் புலிகளிடம் சரண்!



ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது, அவர் இதனைத் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாக கோரிக்கை; பிரதம மந்திரி ஏற்கக்கூடாதாம்!

## பொ.ஐ.மு. பேச்சாளர் அறிவுரை

விடுதலைப் புலிகளுக்கு, இடைக் கால நிர்வாகத்தை வழங்குவதற்கு, பொதுஜன ஐக்கிய முன்னணி கடும் எதிர்ப்புத் தெரிவிப்பதாக, பொ.ஐ.மு வின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இடைக்கால நிர்வாகம் தொடர் பான புலிகளின் கோரிக்கையை, எக் காரணம் கொண்டும் பிரதமர் ஏற்றுக் கொள்ளக்கூடாது. இடைக்கால நிர் வாகம் ஏற்படுத்தப்பட்டால், புலிகளிட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



உவயள் உப்பிடி வருகினமெண் டேக்க பழைய ஞாபகமெல்ல படக் கெண்டு வருகுது..!

# காரைநகர் கடற்படை சிப்பாய் விடுதலைப் புலிகளிடம் சரண்!

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படைத் தளத்தி லிருந்து, சிப்பாய் ஒருவர் தப்பிவந்து விடுதலைப் புலிகளிடம் சரணடைந் துள்ளார்.

நேற்றுக் காலை 7 மணியளவில், காரைநகர் கடற்படை முகாமிலி ருந்து வெளியேறிய எஸ்.பி.தம்மிக நூவான் குமார என்னும் கடற்படைச் சிப்பாய், அயலிலுள்ள கிராம மக்க ளிடம், தான் விடுதலைப் புலிகளிடம் சரணடைய விரும்புவதால், தன்னை அவர்களிடம் கூட்டிச் செல்லுமாறு கேட்டுக்கொண்டதையடுத்து, பொது மக்கள் அவரைக் காரைநகரிலுள்ள புலிகளின் அரசியற்துறைச் செயல கத்தில் ஒப்படைத்தனர்.

தனக்கு கடற்படை முகாமில் கடும் பயிற்சிகளும், துன்புறுத்தல் களும் வழங்கப்படுவதனால், தன் னால் தொடர்ந்து கடற்படையில் இருக்க முடியாது என்று தெரிவித் ததையடுத்து, காரைநகர் அரசியற் துறை நிர்வாக இணைப்பாளர் சி.பாலனால் மேற்படி சிப்பாய்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ள மீட்புப் பணிக்கு ஆயுதங்களுடன் வந்திறங்கியுள்ள இந்தியப் படை!




EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -913)

# மண் கடத்தியோர் எச்சரித்து விடுவிப்பு

(அரியாலை)

அரியாலைப் பகுதியிலிருந்து சட்டவிரோதமாக மண் கடத்தியவர்கள், பொதுமக்களால் பிடிக்கப்பட்டு, எச்சரிக்கை செய்யப்பட்டபின் விடுவிக்கப்பட்டனர்.

இரவு வேளையில், அரியாலைப் பகுதியில் இருந்து மண் கடத்திச் சென்ற உழவு இயந்திரங்களை, துபாற்கட்டையடிச் சந்தியில் வைத்துப பொதுமக்கள் வழிமறித்தனர். மண் கடத்தலில் ஈடுபட்டோர் அடையாளம் காணப்பட்ட பின்னர், எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

## 31ஆம் நாள் நினைவலைகளும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

1948 - 12 - 26



2003 - 04 - 27

அமரர்

**அன்னலிங்கம் விஸ்வலிங்கம்**

நாடகக் கலைஞர், நாட்டுப்பற்றாளர்

(V.T.A. விஸ்வா)

26.05.2003

27.04.2003 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் அன்னலிங்கம் விஸ்வலிங்கம் அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் எதிர்வரும் 24.05.2003 சனிக்கிழமை அன்றும் வீட்டுக்கிருத்தியம் 26.05.2003 திங்கட்கிழமையும் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அச்சமயம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்மசாந்திக் கிரியைகளில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு வேண்டுகின்றோம்.

பூங்கனிச்சோலை,
இராமலிங்கம் வீதி,
முடமாவடி, திருநெல்வேலி.

(சி-952)

- குடும்பத்தினர்

# தொடர்ந்தும் பல பகுதிகள் வெள்ளத்தினால் துண்டிப்பு

## தொற்றுநோய் ஏற்படும் ஆபத்து

(கொழும்பு)

மாத்தறை, தெனியாய, களுத்துறை போன்ற பகுதிகளில் சில பிரதேசங்களில் தொடர்ந்து, ஆறாவது நாளாகவும் வெள்ளத்தால் துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ளன.

வெள்ளம் வடிந்து வருகின்ற போதிலும், தாழ்நிலப் பகுதிகளான இப்பகுதிகளில், ஹெலிகள் இறங்க முடியாதுள்ளன.

இப்பகுதிக்குச் சென்ற பத்திரிகையாளரிடம் கருத்துத் தெரிவித்த இப்பகுதி மக்கள் - தாம் பல நாட்களாக உணவு, குடிநீர் இன்றி இருப்பதாகவும் மரங்கள், வீட்டுக் கூரைகளின் மீது தங்கியுள்ளாதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் - தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஆனால், வெள்ள ஆபத்துக் குறித்து அறிந்தும், சுகாதார அமைச்சர் வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டிருப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

கிடந்த 50 வருடங்களில் ஏற்பட்ட மோசமான வெள்ளப் பெருக்கு இதுவாக இருந்தபோதும் - சுகாதார அமைச்சர் தயாரட்ன, சுவிஸ் நாட்டில், உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருப்பது குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுன்னாகம் பகுதியில் கழிவுகளால் துர்நாற்றம்

சுன்னாகம் கொத்தியாலடி மயானத்திற்குச் செல்லும் பாதையிலும், சுன்னாகம் புகையிரத நிலைய கடவைக்கு அருகிலும் - இறைச்சிக் கழிவுகள், பழுதடைந்த மீன்கள், சலூனகளில் இருந்து அகற்றப்படும் மயிர்கள், தும்புத்தடி செய்யப் பயன்படுத்தப்பட்ட தகரத்தின் வெட்டுத்துண்டுகள் போன்ற கழிவுகள் கொட்டப்படுகின்றன.

இதனால், அப்பகுதியால் செல்லும் மக்கள் மிகுந்த சிரமத்துடனும், சகிக்கமுடியாத துர்நாற்றத்தினால் மூக்கைப் பொத்திக்கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

இது பற்றி இப்பகுதி மக்கள்- சுன்னாகம் பிரதேச செயலருக்கும், பொதுசுகாதாரப் பரிசோதகருக்கும் பலமுறை முறையிட்டும், இதைத் தடுப்பதற்கு எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்வில்லையெனக் கவலை தெரிவிக்கின்றனர். (101)

# துப்பாக்கிச் சூட்டில் சிப்பாய் காயம்!

## மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கொண்டவெட்டுவான் இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர், துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை, கொண்டவெட்டுவான் இராணுவ முகாமில் சக சிப்பாய்களுடன் கலந்துரையாடிக்கொண்டிருந்தபோதே, பின்புறமாகத் துப்பாக்கிக் குண்டு துளைத்ததாகக் காயமுற்ற இராணுவச் சிப்பாய், வைத்தியசாலையில் அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்தார்.

கே.எஸ்.பெரேரா என்ற காயமுற்ற மேற்படி சிப்பாய், மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.


நிறஞ்சனாஸ் சங்கானை
ரஜனி, ரம்பா, சௌந்தர்யா
அருணாசலம்
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு (இரவு 8.45)
CASTAWAY
(சி-882)

ராஜா யாழ்ப்பாணம்.
3 வது வாரம்
இளைய தளபதி விஜய், மீராஜஸ்மின், கருணாஸ்
புதிய கீதை





தினசரி 10.30, 2.30, 6.30
சனி, ஞாயிறு 10.30, 2.30, 6.30, 9.30
(சி-884)

THE ROYAL COLLEGE OF JAFFNA
SPOKEN ENGLISH WITH GRAMMER
N.VIGNESWARAN ARCHERY
BLACK ROAD, CHANKANAI
426 (302), K.K.S.ROAD, JAFFNA
(சி-891)

இப்பொழுது வடக்கிலும் ~ கிழக்கிலும்
GUDWIL







BRAND NEW 4 WHEEL TRACTORS
From 15hp - 45hp / 2 wheel & 4 wheel Drives

ரூ: 230,000 முதல்
இன்றே பதிவுக்கு முந்துங்கள்
மட்டுப்படுத்தப்பட்ட கையிருப்பு

- 2 வருட உத்தரவாதம்
- உதிரிப்பாகங்கள் தாராளமாகக் கிடைக்கும்
- விற்பனையின் பின் இலவச பராமரிப்பு
- மூன்று வண்ணங்களில்
- பலதரப்பட்ட கருவிகள் இணைக்கலாம்
- இழுவைப்பெட்டி - உயர்த்தி சாய்விக்கவல்லது
- அரிசி ஆலைகள் - ஒரேதடவையில் நெல்லை செலுத்தி குற்றிய அரிசியைப் பெறலாம்.
- வட்டியில்லா தவணைமுறை

GUDWIL
Imperters & Distributers
55, Dutugemunu street,
Pamankade, Dehiwela.
Tel: 818415, 074-208101 / 2
0777 - 351695
Fax: 818416

மேலதிக விபரங்களுக்கும் - பதிவுகளுக்கும்:
AMT TRANSPORT SERVICES
பருத்தித்துறை வீதி,
இருபாலை, கோப்பாய், யாழ்ப்பாணம்.
தொ.பே. 021-222 5784
(சி-949)

# வடக்கு-கிழக்கு பகுதியில் இடைக்கால நிர்வாகம்; நியாயமான-நிறைவேற்றவேண்டிய கோரிக்கை!

## இ.தொ.கா. ஆதரவு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றைத் தோற்றுவிக்க வேண்டும் என, அரசாங்கத்திடம் விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் கோரிக்கை நியாயமானதும், அவசியமானதும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் உபதலைவரான எம்.எஸ். செல்லச்சாமி இது குறித்து கருத்து வெளியிடுகையில் மேலும் தெரிவித்ததாவது,

புலிகள் வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை அமைக்குமாறு கேட்டுள்ளது, அவசியம் நிறைவேற்றப்படவேண்டிய நியாயமான கோரிக்கையாகும்.

புலிகளின் கோரிக்கைக்கு ஏற்ப வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தைத் தோற்றுவிக்கப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடனடி நடவடிக்கையில் இறங்கவேண்டும்.

இ.தொ.காவின் மறைந்த தலைவர் தொண்டமான், வடக்கு -கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தைத் தோற்றுவித்து, அதைப் புலிகளிடம் கையளிக்கவேண்டும் என்று பத்து வருடங்களுக்கு முன்னரே கூறியிருந்தார் என்றும் எம்.எஸ்.செல்லச்சாமி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தேசிய ஜனநாயகக் கட்சித் தலைவரும், மத்திய மாகாணசபை உறுப்பினருமான எஸ்.ஏ.கந்தசாமியும் - விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் கையளிக்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் உடன் எடுக்கப்பட வேண்டும். பொ.ஐ.மு. மற்றும் எதிர்க் கட்சிகள் - இடைக்கால நிர்வாக அமைப்புக்கு ஆதரவளிக்க முன்வர வேண்டும்.

இன்றையநிலையில் இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படுவது அவசியம். சர்வதேச சமூகமும் இதையே விரும்புகின்றது. இலங்கையிலுள்ள அனைத்து சமூக மக்களும் இடைக்கால நிர்வாகத்துக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## அமைச்சர்களைக் கண்காணிக்க அவதானிப்புக் குழுக்கள்

(கொழும்பு)

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், அமைச்சர்களின் செயலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளின் நடவடிக்கைகள், செயற்பாடுகளைக் கண்காணிக்க 17 அவதானிப்புக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

அரசாங்க, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கியதாக அமைக்கப்படவுள்ள இந்தக் குழுக்கள் - அரசாங்க ஆவணங்கள் சரியாகப் பேணப்படுகின்றனவா? திட்டங்கள் சரியாக நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா? என்பன குறித்துக் கவனம் செலுத்தும்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரைத் தலைமையாகக் கொண்ட ஒவ்வொரு குழுவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேரடியான தொடர்பைக் கொண்டிருக்கும் எனத் தெரியவருகிறது. இத்தகைய முதலாவது குழுவின் கூட்டம் அண்மையில் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தலைமையில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

## வரதர் அணி உறுப்பினர் துப்பாக்கிச்சூட்டில் காயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனையில் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஈ.பி.ஆர்.எல்.எப் வரதர் அணி உறுப்பினர் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

வாழைச்சேனையில் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோரின் துப்பாக்கிச்சூட்டுக்கு ஈ.பி.ஆர்.எல்.எப் வரதர் அணி உறுப்பினரான ஜஸ்ரின் என அழைக்கப்படும் நாகமணி புஷ்பராஜா (வயது 35) என்பவர் காயமடைந்தார்.

இவர் வாகரைப் பிரதேசசபைத் தலைவராக 1993 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரை பதவி வகித்திருந்தார். முன்னர் ரெலோவில் இருந்த இவர், பின்னர் வரதர் அணியுடன் இணைந்திருந்தார்.

துப்பாக்கிச் சூட்டில் காயமுற்ற இவர் உடனடியாக வாழைச்சேனை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு, அங்கிருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## தற்கொலைத் தாக்குதலை தடுப்பது எப்படி? பிரித்தானியாவுக்கு இலங்கை ஆலோசனை!

தற்கொலைத் தாக்குதல்களைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்த ஆலோசனைகளை இலங்கைப் பொலிஸாரிடம் இருந்து பிரித்தானியப் பொலிஸார் கோரியிருப்பதாகத் தெரியவருகின்றது.

இலங்கையிலும், இஸ்ரேலிலும் அதிகளவிலான தற்கொலைத் தாக்குதல்கள் கடந்த காலங்களில் இடம்பெற்றிருந்தன. இதன் மூலம் இத்தகைய தாக்குதல்கள் எவ்வாறு, எத்தகைய உத்திகளுடன் நடத்தப்படுகின்றன என்பன போன்ற அனுபவங்களை இருநாட்டுப்பொலிஸாரும் அதிகளவில் பெற்றிருக்கின்றனர்.

பிரித்தானியாவிலும் தற்கொலைத்தாக்குதல் அச்சுறுத்தல்கள் இருப்பதால் - இத்தகைய தாக்குதல்களைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்த ஆலோசனைகளை இலங்கை மற்றும் இஸ்ரேலிய பொலிஸாரிடம் கோரியுள்ளதாகப் பிரித்தானிய பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## பாதிக்கப்பட்டோருக்கான உதவிப் பணியில் புலிகள்; பெரும் மகிழ்ச்சி தருகிறது!

### அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவிப்பு



தென்பகுதியில் ஆறு மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக விடுதலைப் புலிகளும் உதவிகளைச் செய்ய முன்வந்திருப்பது தமக்கு மகிழ்ச்சியைத் தருவதாக அனர்த்த முகாமைத்துவக்குழுவின் தலைவரான அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

இயற்கையின் அழிவுகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குச் சர்வதேச நாடுகள் அளித்துவரும் ஆதரவு பெரும் ஆறுதலாக உள்ளதாகக் குறிப்பிட்ட அவர், இந்த உதவிப் பணிக்களில் புலிகளும் இணைந்து கொண்டிருப்பது தமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதாகத் தெரியவித்தார்.




தென்பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உதவிப்பொருட்களை வவுனியா அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் அமைச்சர் சந்திரசேகரனிடம் கையளிக்கிறார்.

## ஒரு லட்சத்து 76 ஆயிரம் குடும்பங்கள் வெள்ளம், மண்சரிவால் இடம்பெயர்வு!

### அனர்த்த முகாமைத்துவக்குழு அறிவிப்பு

கடந்த வாரம் தென்பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, மண்சரிவுகளினால் உயிரிழந்த 265 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டிருப்பதாக, அனர்த்த முகாமைத்துவக் குழு அறிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவக் குழுவின் தலைவரான அமைச்சர் கரு ஜெயசூரிய, நேற்று முன்தினம் இரவு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நேற்று முன்தினம் மாலை வரை உயிரிழந்தோரில் 265 சடலங்கள் மீட்கப்பட்டன. மேலும், பெருமளவிலானோர் காணாமற்போயுள்ளனர். இரத்தினபுரி மாவட்டத்திலேயே அதிகளவிலான இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இரத்தினபுரியில் 135 பேரும், மாத்தளை மாவட்டத்தில் 80 பேரும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 22 பேரும், காலி மாவட்டத்தில் 17 பேரும், களுத்துறை மாவட்டத்தில் எட்டுப் பேரும் உயிரிழந்துள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்த இயற்கை அனர்த்தங்களால் ஒரு லட்சத்து 76 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

மாத்தளை மாவட்டத்தில் அதிகளவாக 68 ஆயிரம் குடும்பங்களும், இரத்தினபுரி மாவட்டத்தில் 47 ஆயிரம் குடும்பங்களும், காலி மாவட்டத்தில் 36 ஆயிரம் குடும்பங்களும் இடம்பெயர்ந்திருப்பதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை - பொதுமக்களின் 24 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள முற்றாக அழிந்துள்ளதாகவும், 26 ஆயிரத்து 200 வீடுகள் சேதமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சில பகுதிகளில் மீட்புப்பணிகள் தொடர்வதால் இறந்தோரின் தொகை உயரும் என்றும், இழப்பு மதிப்பீடுகள் பூரணப்படுத்தப்படாமையால் சேதங்கள் மேலும் அதிகமாக இருக்கும் எனவும் அனர்த்த முகாமைத்துவக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை - வெள்ள, மண்சரிவு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு வட்டியில்லாத சம்பள முற்பணத்தை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

ஏற்பட்டுள்ள சேத மதிப்பீட்டு அறிக்கையைக் கிராம அலுவலர் மூலம் உறுதிப்படுத்தி தத்தமது திணைக்களங்களுக்குச் சமர்ப்பிக்கும் அரச ஊழியர்களுக்குச் சம்பளத் தொகைக்குச் சமனான முற்பணம் வழங்கப்படவுள்ளது.

## பாலியல் பலாத்காரத்தில் இலங்கை கிரிக்கெட் வீரர்கள்

### அணி முகாமையாளர் மறுப்பு

இலங்கை கிரிக்கெட் அணியைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் சிலர் பெண்ணொருவரை பாலியல் வன்முறைக்குள்ளாக்கியதாக வெளியான செய்தியில் உண்மை எதுவும் இல்லை என இலங்கை கிரிக்கெட் அணியின் முகாமையாளர் அஜித் விஜேசேகர தெரிவித்தார்.

முக்கோணக் கிரிக்கெட் போட்டிககாகச் சிகிரியாவில் தங்கியிருந்த இலங்கைக் கிரிக்கெட் அணிவீரர்கள் - கடந்த செவ்வாயன்று இரவு இரண்டு கார்களில் புறப்பட்டுச் சென்று, ஹபறணவிலுள்ள ஹோட்டலொன்றில் இரவு விருந்தில் கலந்து கொண்டதாகவும்,

பின்னர் - இவர்கள், கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஊடக முகாமையாளரான பெண்ணொருவரைத் தாம் தங்கியிருந்த சிகிரியா விலேஜ் ஹோட்டலுக்குக் கொண்டு சென்று, அவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால் - இந்தச் சம்பவம் உணமைக்குப் புறம்பானதெனவும், இதுவரை - தம்புள்ள, சிகிரியா, ஹபறண பொலிஸ் நிலையங்களில் இதுபற்றி எதுவித புகார்களும் பதிவுசெய்யப்படவில்லை எனவும் - இலங்கை கிரிக்கெட் அணி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## தாய்லாந்து கடற்படைத்தளபதி கொழும்புக்கு வந்துள்ளார்

அரசாங்கத்தின் விசேட அழைப்பை ஏற்றுத் தாய்லாந்துக் கடற்படைத்தளபதி நேற்றுக் கொழும்பு வந்துள்ளார். இவரைக் கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி வரவேற்றார்.

தாய்லாந்து கடற்படைத்தளபதி கொழும்பில் தங்கியிருக்கும்போது- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் முப்படைகளின் பிரதம தளபதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவப் பாதுகாப்பு கூட்டு நடவடிக்கைகள் தொடர்பாகத் தாய்லாந்து கடற்படைத்தளபதி பேச்சுக்களை நடத்துவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர், இலங்கையிலுள்ள முக்கிய கடற்படைத்தளங்களுக்கு விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## க.பொ.த. உயர்தரப்பரீட்சை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது!

### பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள் மீண்டும் பிற்போடப்பட்டிருப்பதாகப் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

கடந்த வாரம் நடைபெறவிருந்த உயர்தரப் பரீட்சைகள் இன்றும், நாளையும் நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

தென்பகுதியில் ஆறு மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு, மண்சரிவுகளால் இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதால், இந்தப் பரீட்சைகள் முன்னர் பிற்போடப்பட்டிருந்தன.

எனினும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலைமை வழமைக்குத் திரும்பாததால் மீண்டும் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகப் பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

அத்துடன், குறிப்பிட்ட பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்ற வசதியில்லாத மாணவர்கள் வேறு நிலையங்களில் தோற்றவும் வசதிகள் செய்யப்பட்டிருப்பதாகவும் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

## முதலாவது அகவையில்

பெயர் : அ.அபிஷேக்
முகவரி : கல்திட்டி,
கொக்குவில் மேற்கு.



## இரண்டாவது அகவையில்



பெயர் : பி.வேணுஜா வஸ்ரலா
முகவரி : 10 ம் வட்டாரம்,
நெடுந்தீவு,

## இரண்டாவது அகவையில்

பெயர் : அ.விதுஷாலினி
முகவரி : கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.



## இரண்டாவது அகவையில்



பெயர் : ர.சிந்தியா
முகவரி : நெடியகாடு வடக்கு,
வல்வெட்டித்துறை.

## ஐந்தாவது அகவையில்

பெயர் : ஸ்ரீ.அஜித் டானியல்
முகவரி : 30, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி.



பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-----------------------------------------------

முகவரி :-----------------------------------------------

பிறந்த ஆண்டு, திகதி :-----------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------------
பெற்றார் ஒப்பம்


# வாசுதேவ நாணயக்கார பங்கேற்கும் கருத்தரங்கு இன்று யாழ். பல்கலையில்!

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் 'பாதுகாப்பு, சமாதானத்துக்கான கூட்டு முயற்சிக்கான உபாயங்கள்' என்ற மக்கள் கருத்தமர்வு இன்றும் நாளையும் யாழ். பல்கலைக்கழகப் புவியற்துறை மணடபத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 8.30 மணிமுதல் மாலை 5 மணிவரை இருநாட்களும் தொடர்ந்து இடம்பெறும் இந்தக் கருத்தமர்வில், தென்பகுதியிலிருந்து வாசுதேவ நாணயக்கார, திருமதி நிமல்கா பெர்ணாண்டோ, கலாநிதி தாரணி இராஜசிங்கம், சேனநாயக்க, தேசிய சமாதானப் பேரவையைச் சேர்ந்த எஸ்.பாலகிருஸ்ணன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக்கருத்தரங்கை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோர் ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

### மிதிவெடி விழிப்புணர்வுக் கண்காட்சி

சிறுவர் பாதுகாப்பு நிதியம்-மிதிவெடி விழிப்புணர்வு தொடர்பான கண்காட்சியினை நடாத்தவுள்ளது. இதன்படி எதிர்வரும் 26, 27 ஆகிய இரு தினங்களில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், 28, 29 ஆகிய தினங்களில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும் இந்த மிதிவெடி விழிப்புணர்வுக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு யுனிசெப் நிறுவனத் திட்டப்பணிப்பாளர் கனோக் பிரதம விருந்தினராகவும், வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வராஜா, தென்மராட்சிப் பிரதேச செயலர் கேதீஸ்வரன், கல்லூரி அதிபர் கைலாயநாதன், சிறுவர் பாதுகாப்பு நிதிய தலைமையகப் பிரதிநிதி லக்ஸ்மன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

# நியாப் திட்டங்கள் குறித்து வேலைப் பட்டறையில் ஆராய்வு

நியாப்பின் திட்டமிடல் மற்றும் திட்டம் செயற்படுத்துதல் ஆகியவற்றினை ஒழுங்குபடுத்துவதற்கான துரித மதிப்பீட்டுக் குழுவின் ஆய்வு பற்றிய வேலைப்பட்டறை, நேற்று முன்தினம் யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ். அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் - வவுனியா வளாக வணிகக் கல்வி பீடாதிபதி இ.நந்தகுமார் ஆற்றுப்படுத்தலை மேற்கொண்டார்.

காலை 9 மணிமுதல் நடைபெற்ற இந்நிகழ்வில் - நியாப்பின் கோட்பாடுகளும், செயற்பாடுகளும், வேலைப் பட்டறையின் நோக்கமும், யாழ். மாவட்டத்தில் நியாப்பின் நீர்ப்பாசன கட்டுமான அமைப்புமுறைகள், திட்ட செயற்பாடு, ஒழுங்கமைப்பு எனபன பற்றிய திட்டக்குழுவின் அவதானிப்புக்கள், அவை ஒழுங்குபடுத்த தேவையான சிபார்சுகள், மையக் கிராமங்கள் சமூக வலுவூட்டல், கிராம மட்ட அமைப்புக்கள் ஜீவனோபாயத் திட்டம் பற்றிய நியாப்பின் கோட்பாடுகள், திட்ட செயற்பாட்டு ஒழுங்கமைப்புப் பற்றிய குழுவின் அவதானிப்பு என்பன தொடர்பாகத் துறை சார்ந்தவர்களால் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. (சு)

# உளவளத்துணை பயிற்சி பெற்றோர் இன்று சான்றிதழ் பெறுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புக்கள் அலகு, ஜி.ரி. இசற் நிறுவனம், வட - கிழக்கு மாகாண கல்வி, கலாசார அமைச்சு ஆகியன இணைந்து உயர்தர உளவளத் துணையாளர் பயிற்சிநெறி ஒன்றினை கடந்த 6 மாத காலமாக 'சாந்திகம்' உளவளத்துணை நிலையத்தில்- பேராசிரியர் தயா சோமசுந்தரத்தின் வழிகாட்டலில் நடத்தி வந்தது. ஆறு மாதகாலம் இடம்பெற்ற இப்பயிற்சி நெறியில் - வன்னி, யாழ்ப்பாணப் பிரதேசங்களைச் சேர்ந்த முப்பத்தைந்து ஆசிரியர்கள் உளவளத் துணையாளர்களாகப் பயிற்சி பெற்றுள்ளனர்.

இந்த உளவளத்துணையாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று பி.ப. 2.30 மணிக்குக் கைலாசபதி கலையரங்கில் ஜி.ரி. இசற். வவுனியா கிளைப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு, மேற்படி பயிற்சி பெற்றோருக்கான சான்றிதழ்களை வழங்கவுள்ளார். கௌரவ விருந்தினராக வட - கிழக்கு மாகாணக்கல்வி கலாசார அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக உடல்நலத்துறைத் தலைவர் பேராசிரியர் தயா சோமசுந்தரம் எழுதிய 'சிறுவர் மனநலம்' என்னும் நூல் வெளியீடும், இடம்பெறவுள்ளது. தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், மெய்யியற்துறை தலைவர் பேராசிரியர், சோ.கிருஷ்ணராசா ஆகியோர் மேற்படி நூல் ஆய்வுரையை நிகழ்த்தவுள்ளனர்.

இந்நிகழ்வின் இறுதியில் உளவளத்துணையாளர் பங்குகொள்ளும் ஆற்றுகை ஒன்றும், கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றுள்ளன.

### சீருடை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத் திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள் நாளை மறுநாள் பிரதேச செயலகத்தில் வைதது வழங்கப்படவுள்ளது.

சீருடைகளை அன்றைய தினம் தவறாது வந்து பெற்றுக்கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

### மர்மப்பொருள் வெடித்துக் காயம்

வளவினைத் துப்பரவுசெய்து குப்பைக்கு நெருப்பு வைத்தபோது, அதிலிருந்த மர்மப்பொருள் வெடித்ததில் அரியாலைவாசி கழுத்துப் பகுதியில் பலத்த காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை அரியாலை புங்கன்குளப்பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் காந்திவீதி அரியாலையைச் சேர்ந்த கந்தையா சோமசேகரம் (வயது 52) என்பவரே காயமடைந்தவராவார். (121)

### சட்டவிரோத இறைச்சி அழிப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக வெட்டப்பட்டு நாவலர் வீதியில் தனியார் இருவரினால் விற்பனை செய்யப்பட்ட 106 கிலோ மாட்டிறைச்சி, யாழ்.மாநகரசபையின் பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையிலான குழுவினரால் கைப்பற்றப்பட்டு, அவ்விறைச்சி முழுவதும் அழிக்கப்பட்டு, சபையின் கொல்களத்தில் புதைக்கப்பட்டது. வியாபாரிகளும் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டனர். இச்சம்பவம் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்றது.

# கருணாகரனின் கவிதைநூல் இன்று வெளியீட்டு விழா!

'ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புக்கள்' என்ற கருணாகரனின் கவிதைகள் நூல் வெளியீட்டுவிழா இன்று பி.ப 3.30 மணிக்குப் புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்திதுரை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் மற்றும் திருமதி தில்லைநாயகம் ஆகியோர் சுடரேற்றி வைப்பர்.

நூல் வெளியீட்டுரையை நிலாந்தன் நிகழ்த்த, விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர் வே.பாலகுமாரன் நூலை வெளியிட்டு வைப்பர். பிரதிகளை முகுந்தன் வழங்குவர்.

கருணாகரனின் கவிதைகள் பற்றி கவிஞர் இ.முருகையன், முல்லைக்கோணேஸ் ஆகியோரின் பார்வைகளும் இடம்பெறும்.

### கண்காணிப்புக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில், துயிலும் இல்ல மேம்பாடு தொடர்பாகக் கூட்டம் ஒன்று நடைபெற்றவேளை, அப்பகுதியில் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் ரோந்து நடவடிக்கைகளில் இராணுவத்தின் மோட்டார் சைக்கிள் படையினர் ஈடுபட்டது தொடர்பாக யாழ். மாவட்ட அரசியற்துறை - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளது. (13)



யாழ். கோண்டாவில் பரம்சோதி வித்தியாலய ஆசிரியர் சி.கிருஷ்ணானந்தன் 60 வயதை பூர்த்திசெய்ததையிட்டு, சேவைநலன் பாராட்டு விழாவும், பரிசளிப்பு விழாவும் அண்மையில் பாடசாலையில் நடைபெற்றபோது - வித்தியாலய அதிபர் சு.சண்முககுமார் மாலை அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.

## வார்த்தை விளையாட்டு - 34

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஆ | | | 2 | | ■ |
| 3 | 4 | ர | | ■ | 5 |
| | | ■ | 6 பி | | |
| | | ■ | 7 | | வை |
| 8 அ | | 9 | | ■ | 10 |
| ■ | ■ | | 11 | வா | |

முழுப் பெயர் : ..............................

கற்கும் பாடசாலை : ..............................

கற்கும் தரம் : ..............................

முகவரி : ..............................

.............................. ..............................

கையொப்பம் திகதி

### இடமிருந்து வலம்

1. மகிழ்ச்சி.
3. நான்கு பக்கமும் சமனான உரு.
6. தலையின் பின்புறம்.
7. பறக்கக் கூடியவை.
8. நிலா.
11. குதிரையில் பயணிப்பதை இப்படிச் சொல்வர்.

### மேலிருந்து கீழ்

1. இருக்கை.
2. அண்ணனுக்கு எதிர்ப்பதம்.
4. துக்கம்.
5. பெண்.
9. வீடுகளிலும் வளர்க்கப்படும் பறவை.
10. அரசினால் விதிக்கப்படும் இறை.



### வார்த்தை விளையாட்டு - 33 இன் சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. பிரதமர்.
4. அவல்.
5. வல்லூறு.
6. சிலி.
8. அவா.
9. நரி.
10. சங்கு.
11. பகுதி



**மேலிருந்து கீழ்**

2. தவசி.
3. மல்லிகை.
4. அலவாங்கு.
7. தரிசு.
8. அசதி.
9. நகம்.

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேற்காணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில்,



**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.



என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 28-05-2003
சரியான விடை எழுதிய மூவரை குலுக்கல் மூலம் தெரிவுசெய்து பரிசு வழங்கப்படும்.

### வார்த்தை விளையாட்டு - 33

இல் பங்குபற்றி சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1 ஆம் பரிசு -*
**குகக்குமாரன் மணிமாறன்**
துலாக்கட்டு,
வதிரி, கரவெட்டி.

*2 ஆம் பரிசு -*
**விவேக்கா பாஸ்கரன்**
இல.18, பிறவுண் வீதி,
1 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

*3 ஆம் பரிசு -*
**சச்சிதானந்தம் சுரேஸ்**
1 ஆம் கட்டை,
கல்வயல்,
சாவகச்சேரி.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*



# சிறுவர் அரங்கம்

## முயலாரின் கபட நாடகம்

அது ஒரு காலம். அந்தக் காலத்தில் எல்லாப் பிராணிகளும் ஒற்றுமைக்காகவே இருந்தன. ஒன்றின் உணவை அது மற்றதோடு பங்கிட்டுச் சாப்பிடும். ஒன்றின் நன்மை, தீமைகளில் மற்றது பற்குகொள்ளும். அந்த நாட்களில் முயலார் எவ்வித போக்கிரித்தனத்திலும் ஈடுபட்டதில்லை. நரியாரும், ஓநாயாரும், கரடியாருங்கூட அவருக்கு நண்பர்களே.

இவ்வாறு இவர்கள் ஒற்றுமையாய் இருக்கையில், முயலாருக்கு எவ்வித வேலையும் இல்லை. ஒரே இடத்தில் உட்கார்ந்திருப்பதும், உண்பதும், உறங்குவதுந்தான். மாறி மாறி இவற்றையே செய்வது அவருக்கு அலுப்பைத் தந்தது. ஆளும் நன்றாகக் கொழுத்துப் போனார்.

தமது கொழுப்பையும், சோம்பலையும் போக்க எவ்வளவோ முயன்று பார்த்தார். உடல் கொழுப்புக் கொஞ்சமும் குறையவில்லை. அப்பொழுதுதான் அவருடைய மூளை தீவிரமாக வேலைசெய்யத் தொடங்கியது.

ஒரு நாள் இரவு நிலாக்காய்ந்து இரவைப் பகலாக்கியவேளை. அவர் ஆமையாரைச் சந்தித்தார். "ஆமையாரே நாளை இரவு ஏதாவது சிறு குறும்பு செய்யவேண்டும்போல இருக்கிறது. இதற்கு நீர் என்னுடன் ஒத்துழைப்பீரல்லவா?" என்று ஆமையாரைக் கேட்டார். ஆமையாரும் சம்மதித்தார்.

"ஓநாயார், கரடியார், நரியார் மூவருந்தான் என் குறும்புக்கு இலக்குகள். நாளை இரவு இதேநேரம் அவர்களையும் புல் அம்மையாரையும், அவர் மக்களையும் காற்றாடி இயந்திரத்தின் அருகில் சந்திப்போம். நான் எது சொன்னாலும் நீர்

ஆங்கிலத்தில் - எனிற் பிளைற்றன்
தமிழில் - சொக்கன்



ஆமாம் போட்டால் சரி. மிகுதியை நான் பார்த்துக் கொள்வேன்" என்றார் முயலார்.

"நீர் சொன்னபடியே செய்வேன்" என்று ஆமையார் மகிழ்ச்சியோடு விடை அளித்தார். இருவரும் பிரிந்து சென்றார்கள்.

முயலார் தாம் வழியிலே சந்தித்த கரடியார், ஓநாயார், நரியார் முதலிய எல்லோரையும், அடுத்தநாள் இரவு காற்றாடி இயந்திரத்தின் அருகிலுள்ள குளத்திலே மீன்பிடிக்க வருமாறு கேட்டுக்கொண்டார். "மீன் பிடித்தல், மிகவும் நல்ல பொழுதுபோக்குத்தான், அதுவும் நிலாக்காயும் இரவு அதற்கு ஏற்றதுதான். நாங்கள் பூரண சம்மதம்" என்று எல்லோரும் சொன்னார்கள். புல் அம்மையாரும், அவர் பெண்மக்களும் மீன் பிடிப்போருடன் பொழுதுபோக்குவதை நினைத்து மிகவும் மகிழ்ந்தார்கள்.

அடுத்த நாள். குறித்த நேரத்தில் ஒவ்வொருவரும் மீன்பிடிக்கும் கருவிகளோடு குளக்கரைக்கு வந்தார்கள். கரடியார் தூண்டிலும், கயிறும் கொண்டுவந்தார். ஆமையார் தூண்டிலிலே கொளுவுவதற்கான பூச்சி, புழுக்களைப் பிடித்து ஒரு பெட்டியில் இட்டு எடுத்து வந்தார். நரியார் எங்கோ தேடி வலை கொண்டுவந்தார். புல் அம்மையாரும், அவர் மக்களும் குளக்கரையிலே வந்து புதினம் பார்க்கத் தயாரானார்கள்.

எல்லோரும் ஆயத்தம். முயலார் அவர்களைச் சிறிது பொறுக்கும்படி சொன்னார். குளத்தின் அருகில் சென்றார். நீரை உற்றுப்பார்த்தார். நெடுநேரம் பார்த்தார். அவருக்கு ஏதோ அதிர்ச்சி ஏற்பட்டதுபோலத் தோன்றியது. பெரிய ஏமாற்றம் அடைந்தவராய்ப் பெருமூச்சு விட்டார். அவரின் செயலைப் பார்த்த யாவரும் திகைத்தனர்.

புல் அம்மையாரால் தமது ஆவலை அடக்கமுடியவில்லை. "முயலாரே, என்ன காரியம்? தண்ணீரைப் பார்த்துக் கொண்டு மலைத்து நிற்கிறீரே! ஏன்?" என்று அவர் முயலாரைக் கேட்டார்.

முயலார் தமது பார்வையைத் திருப்பவில்லை. தண்ணீரையே வைத்த கண் வாங்காது பார்த்தார். தலையைச் சொறிந்தார். "நண்பர்களே, இன்றைக்கு மீன்பிடிக்க முடியாது. எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வீடு சொல்வோம். எங்கள் அதிர்ஷ்டம் அவ்வளவுதான்!" என்ற பொழுது - அவர் குரல் உடைந்திருந்தது, நா தழுதழுத்தது.

முயலார் ஏன் அப்படிச் சொல்கிறார்? ஒருவருக்கும் விளங்கவில்லை.

ஆமையார் முயலாரின் அருகிலே சென்றார். முயலாரைப்போலவே குளத்து நீரை உற்றுப் பார்த்தார். "ஆமாம், முயலார் சொல்வது உண்மைதான். இன்று மீன்பிடிக்க இயலாது" என்றார்.

மற்றவர்கள் "அது ஏன்?" என்று ஒரேகுரலில் கத்தினார்கள். முயலார் "தயவு செய்து குழப்பம் அடையாதீர்கள். இந்தக் குளத்தினுள்ளே சந்திரன் விழுந்துவிட்டது. அவ்வளவுதான்" என்றார்.

நரியாருக்கு முதலில் நம்பிக்கை ஏற்படவில்லை. ஆனால், அவரும் குளத்தை உற்றுப் பார்த்த பின், முயலார் சொன்னதை ஆமோதித்தார். அடுத்து ஓநாயாரும் பார்த்தார். அதேமுடிவுக்கு வந்தார். "இது சுத்த மோசம். என்ன செய்யலாம்?" என்று கரடியார் மூக்கில் விரலை வைத்து யோசித்தார். புல் அம்மையாரும், அவர் மக்களுங்கூட நீரைப் பார்த்தபின் "நீங்கள் சொல்வது மிகவும் சரி. பாவம்! சந்திரன்" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார்கள்.

"இப்படிச் சொல்லிக்கொண்டு பெருமூச்சு விடுவதால் ஒரு பிரியோசனமும் இல்லை. நாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து சந்திரனை எடுத்து வெளியிலே விடுவதுதான் புத்தி" என்றார் முயலார்.

"அதற்கு என்ன செய்யலாம்?" அனைவரும் கூட்டமாகக் கேட்ட கேள்வி.

"நாங்கள் நீருள்ளே இறங்குவோம். சந்திரனைத் தூக்குவோம்" என்று சொல்லிய வண்ணம் முயலார் நீரினுள்ளே காலை வைத்தார். ஆனால், மற்றவர்கள் அவர் கையைப் பிடித்துத் தடுத்தார்கள். "உமக்குத் தண்ணீர் ஒத்துவராது" எனறு நரியார் சொல்லிவிட்டு வலையை எடுத்துக்கொண்டு நீரில் இறங்கினார். "கரடியாரே, ஓநாயாரே, நீங்கள் ஒவ்வொரு பக்கமாக வலையின் நுனியைப் பிடியுங்கள். தண்ணீரினுள்ளே வலையைப் போடுவோம். சந்திரன் வலையில் அகப்படாமலா போய்விடும்?" என்றார். அவரின் ஆலோசனையை ஏற்ற ஓநாயாரும், கரடியாரும் நீரில் இறங்கி நரியார் சொன்னபடியே வலையின் மூலைகளைப் பிடித்தபடி வலையை நீரினுள் போட்டார்கள். பல தடவைகள் சந்திரன் அகப்பட்டு விட்டதாக நம்பி வலையை வெளியே இழுத்தார்கள். ஆமையார் நீரினுள்ளே சுழியோடிச் சந்திரனைப் பிடிக்கமுயன்றார்.

ஒவ்வொருமுறையும் வலையை வெளியே இழுக்கையில் நீர்த்துளிகள் சிதறின. அவை நரியாரதும், ஓநாயாரதும், கரடியாரதும் காதுகளுக்குள் சென்றன. அதனால், அவர்களுக்குக் காதடைப்பு ஏற்பட்டது.

ஆமையார் நீண்ட நேரத்திற்குப் பிறகு கரைக்கு வந்து "சந்திரனைப் பிடிக்க முடியவில்லை" என்று சலிப்போடு சொல்லிவிட்டு, வீடு சென்று உடைமாற்றித் திரும்பினார்.

நீண்டநேர முயற்சியின் பின்பு நரியாரும், நண்பர்களும் - ஆமையாரின் முடிவுக்கே வந்தார்கள். அந்தவேளையில், அவர்கள் தெப்பமாக நனைந்து குளிரில் நடுங்கினார்கள்.

இவர்களின் கோலத்தைக் கண்டு புல் அம்மையாரும், மக்களும் வயிறு குலுங்கச் சிரித்தார்கள். முயலாரும் அவர்களோடு சேர்ந்து சிறித்தார்.

முயலார் சிரித்தபடியே ஆகாயத்தைக் காட்டினார். அங்கு சந்திரன் மிகவும் பிரகாசமாகக் காட்சி தந்தது.

ஓநாயாரும், நரியாரும், கரடியாரும் ஈரம் துவட்டி, வேறு உடை அணியத் தங்கள் தங்கள் வீட்டுகள் சென்றார்கள்.

முயலாரும், ஆமையாரும், புல் அம்மையார் வீட்டுக்குச் சென்று அவர் அளித்த விருந்தில் கலந்துகொண்டார்கள். ★

# இளந்தேனிக்கள் கழகம்

## அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-
சே.சஞ்சிகா
கற்கும் பாடசாலை :-
மகாஜனாக் கல்லூரி.
கற்கும் தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப்புத்தகம் வாசித்தல்,
முத்திரை சேகரித்தல்.



முழுப்பெயர் :-
அ.அகிம்சன்
கற்கும் பாடசாலை :-
தர்மபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.
கற்கும் தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள் :
வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.



முழுப்பெயர் :-
வி.கம்சாயினி
கற்கும் பாடசாலை :-
அச்சுவேலி மத்திய கல்லூரி.
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப்புத்தகம் வாசித்தல்,
கல்வித்துறை.



முழுப்பெயர் :-
பா.பிரதீப்
கற்கும் பாடசாலை :-
சுதுமலை தமிழ்க்கலவன் வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு.

முழுப்பெயர்:-
சி.சிவரஞ்சினி.
கற்கும பாடசாலை :-
வடமராட்சி மகளிர் கல்லூரி.
கற்கும் தரம் :- 11
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், கணிதம்,
தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர்:-
மு.சம்றான்
கற்கும் பாடசாலை :-
வைத்தீஸ்வராக் கல்லூரி.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
முத்திரை சேகரித்தல், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர்:-
ர.தமிழ்ப்பிரியா
கற்கும் பாடசாலை :-
மல்லாகம் மகா வித்தியாலம்
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, வானொலி கேட்டல்,
கல்வித்துறை.

முழுப்பெயர்:-
இ.சத்தியஜெயந்தி
கற்கும் பாடசாலை :-
மானிப்பாய் மகளிர் கல்லூரி.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திகை வாசித்தல், வானொலி கேட்டல்.

# எது பெருமை

அருவிக்குப் பெருமை நீராலே.
ஆற்றுக்குப் பெருமை ஊற்றாலே.
வானுக்குப் பெருமை மழையாலே.
நிலவுக்குப் பெருமை இரவாலே.
மலருக்குப் பெருமை மணத்தாலே.
மனிதர்க்குப் பெருமை குணத்தாலே.

இராசதுரை பிரியா,
சைவ மங்கையர் கழகம்,
வெள்ளவத்தை.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் :..................................
கற்கும் பாடசாலை :..................................
கற்கும் தரம் :..................................
வீட்டு முகவரி :..................................
பிறந்த திகதி :..................................
ஆர்வமுள்ள துறைகள் :..................................
:..................................

................ ..............................
திகதி ஒப்பம்

.......................... ........................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

# விடுகதைகளும் விடைகளும்

1. வாயிலே பூத்து வாயிலே மறையும் பூ. அது என்ன?
   சிரிப்பு
2. பல்லுண்டு ஆனால் கடிக்க மாட்டான். அவன் யார்?
   சீப்பு
3. செப்பு நிறைய சிவப்பு நிற முத் துக்கள். அது என்ன?
   மாதுளம்பழம்
4. ஏறு ஏறு சங்கிலி இறங்கு இறங்கு சங்கிலி எட்டாத கொப்பெல்லாம் தொட்டு வா சங்கிலி. அது என்ன?
   அணில்
5. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம். அது என்ன?
   உள்ளங்கை

அருள்நந்தி அபினா
யா/உருப்பிட்டி மகளிர் கல்லூரி.

1. அவனுக்கு வீடு, மற்றவர்களுக்கு வலை. அது என்ன?
   சிலந்திவலை
2. கண்ணீர் விட்டே கடைசிவரை ஒளிதருவான். அவன் யார்?
   மெழுகுதிரி
3. மொட்டைப்பாட்டிக்கு உச்சியிலே குடுமி. அது என்ன?
   தேங்காய்
4. ஒரு டப்பிக்குள் இரு தைலம். அது என்ன?
   முட்டை
5. வெளிச்சத்தில் தொடர்வான், இருட்டில் மறைவான், பலே திறமைசாலி. யார் அவன்?
   நிழல்
6. கால் இல்லாமல் ஓடுகிறான் அவன் யார்?
   மணிக்கூடு.



ர.தேனுகா,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

# உங்கள் கைவண்ணம்



ச.சக்திபாலன்,
தரம் - 6,
யாழ்.ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கந்தரோடை,
சுன்னாகம்.

## My Self

1. I' m Mathiyathani.
2. I'm Eleven Years old.
3. I Live at Pannalai.
4. My Address is - Miss. Mathivathani
   Pannalai, Tellippalai.
5. My Father's name is Pathmanathan.
6. I have three brothers.

*P.Mathivathani*
*J/Mahajana college.*

# குதிரை

கிட்டத்தட்ட 60 மில்லியன் வருடங்களுக்கு முன்னரே உலகத்தில் தோன்றியவை குதிரைகள். ஆனால், தற்போதைய வடிவத்தை அவை 10,000 ஆண்டுகளுக்குள் தான் பெற்றன.

ஹைரக்கோதீரியம் - மீஸோஹிப்பஸ் - மெரிசிப்பஸ் - ப்ளியோஹிப்பஸ் - ஈக்குவஸ் என இன்றைய வடிவத்தை அடைய குதிரைக்கு இத்தனை பரிணாம வளர்ச்சிகள் வேண்டியிருந்தன. ஹைரக்கோதீரியம் நிலையில் இன்றைய பன்றிகளின் அளவுதான் குதிரைகள் இருந்தன. பரிணாம வளர்ச்சியில் எதிரிகளைச் சமாளிக்க உயரமும் மற்றும் வேகமும் பெற்றன.

உலகின் முதல் தாவர பட்சிணி - அதாவது செடி, கொடி, புல் போன்றவற்றை மட்டும் உண்பதற்கான பல்வரிசையும், குடல் அமைப்பும் கொண்டு அமைந்த முதல் மிருகம் குதிரைதான்.

வரிக்குதிரைகள், கழுதைகள் போன்றவையும் குதிரையை ஒத்த அமைப்பில் வரும். இருந்தாலும், பல்வரிசை போன்றவற்றில் வித்தியாசம் உண்டு.

தற்போதைய உலகத்தில் ஏ-இசற் (A-Z) அத்தனை எழுத்துக்களிலும் குதிரை வகைகள் இருந்தாலும், அதன் பொதுவான பிரிவுகள் மூன்று. சென்ட்ரல் யூரோப்பியன், நொதேன், சதேர்ன்.

சென்ட்ரல் யூரோப்பியன் குதிரைகள் 1.7 மீற்றர் உயரத்துடனும், பெரிய பாதங்களுடனும், குண்டான முகத்துடனும், சிறிய கண்களுடனும் இருக்கும்.

வடபகுதிக் குதிரைகள் என்பவை மிகவும் குளிர்ந்த பிரதேசங்களில் காணப்படுபவை. சற்றே குள்ளமாக, குண்டாக, சிறிய காதுகளுடன் இருக்கும். உள்ளே செல்லும் குளிர்காற்றை உஷ்ணமாக மாற்றி அனுப்பும் வகையில் மூக்கு இருக்கும்.

தென்பகுதிக் குதிரைகள், சூடான வறட்சிப் பகுதிகளில்

# சில தகவல்கள்

வாழ்பவை. உயரமாக, சற்று ஒல்லியாக இருக்கும். இவற்றின் மூக்கு சூடான காற்றை சற்று ஈரப்படுத்தி அனுப்பும் வகையில் இருக்கும்.



உலகத்திலுள்ள அத்தனை பாலூட்டிகளைவிடவும் குதிரையின் கண்கள் பெரியது (5x6.5 செ.மீ)

குதிரைகளால் அதன் மூக்குக்குக் கீழ் உள்ளவற்றையும், சரியாகப் பின்னால் இருப்பவற்றையும் மட்டும் பார்க்கமுடியாது.

மிகமிகக் குறைந்த வெளிச்சத்தில் கூட அவற்றால் தெளிவாகப் பார்க்க முடியும். ஆனால், நிறங்களைப் பிரித்தறிவது மட்டும் கடினம்.

குதிரைகளால் ஒரேநேரத்தில் இரண்டு விஷயங்களைக் கேட்கமுடியும். எந்த திசையில் இருந்து வரும் சத்தத்தைக் குதிரை கேட்கிறது என்பதை அவற்றின் காதுகளை வைத்தே கண்டுபிடிக்கமுடியும். சின்னச் சின்னச் சத்தங்களும் குதிரைக்குத் துல்லியமாகக் கேட்கும்.

முகர்ந்து பார்ப்பதிலும், ருசி அறிவதிலும்கூட குதிரைகள் கெட்டிக்காரப் பிராணிகள்தான். வழக்கமாக அவை தண்ணீர் குடிக்கும் இடத்திலிருந்து மாற்றி, வேறு தண்ணீர் கொடுத்தால்கூட கண்டு பிடித்துவிடும் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

ஒரு குழுவுக்கு ஒரு ஆண் குதிரையோ, வயது முதிர்ந்த பெண்குதிரையோ தலைமைப் பொறுப்பில் இருக்கும்.

ஒரு குதிரையின் ஆயுட்காலம் சுமார் 30 வருடங்கள்.

தற்போது உலகெங்கும் குதிரை ஓட்டுபவர்கள் எண்ணிக்கை ஒரு கோடியைத் தாண்டும். ஆனால், பண்டைய கால கிரேக்க வரலாற்றில் பொசெய்டன்(Poseidon) என்கிற கடற் கடவுளும், பாதி மிருகம் - பாதி மனிதனாக இருக்கும் வேற்றுக்கிரகவாசிகளும் மட்டுமே குதிரை ஓட்டிகளாக இருந்தனர். முதன் முதலில் குதிரை ஓட்டத் தொடங்கியது கிரேக்கர்கள்தான்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவது ஓர் நோய்
- திருக்குறள்.

# நமது நோக்கு

## தளைகளுக்கு வெளியே...!

தமிழர் பகுதிகளில் போரின் வடுக்களை அகற்றி, சுமுக வாழ்வொன்றுக்கு வித்திடுவதற்கான இடைக் கால நிர்வாகக் கட்டமைப்பொன்றின் அவசியத்தை வலியுறுத்திவரும் விடுதலைப் புலிகள் - அத்தகைய நிர்வாகக் கட்டமைப்பானது - ஓர் உறுதியான வழியில், சிக்கல்களும், நெருக்குதல்களும், பொறிகளும் அற்றதாக உருவாக்கப்பட்டாக வேண்டுமென்பதில், தமது தெளிவான கருத்தை அறிவித்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை, எத்தகைய வழிகளில் உருவாக்கலாம் என அரசாங்கம் சிந்தித்தாலும் - அது, ஆக்கபூர்வமாகச் செயற்பட்டு - புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளைத் தாமதமின்றி முன்னெடுக்க உதவவேண்டுமாக இருந்தால் - அக்கட்டமைப்புக்குரிய அதிகாரங்கள் வலுவுடையதாகவும், முட்டுக்கட்டைகளற்றதாகவும் இருக்கவேண்டுமென்ற விடுதலைப் புலிகளின் எதிர்பார்ப்பு, கருத்திலெடுக்கப்பட வேண்டியது மிக அவசியமானதாகும்.

அவ்வாறானதொரு கட்டமைப்பை உருவாக்கும்போது - அது, 'சிறான்' அமைப்புப் போன்றோ அல்லது முன்னைய வேறு சில கட்டமைப்புக்களைப் போன்றோ அதிகாரமற்றதாக, உதவிகளற்றதாகச் செயலிழந்து போய் விடக்கூடாது என்பதில் உறுதியாயிருக்கும் விடுதலைப் புலிகள் -

அரசியலமைப்பின்படி உருவாக்கப்படும் எந்தக் கட்டமைப்பும் - நெருக்கடிகளாலும், தலையீடுகளாலும் பாதிக்கப்படக்கூடியதே என்பதைக் கடந்தகால வரலாற்றினடிப்படையில் உணர்ந்து, பட்டறிந்து தீர்மானித்திருக்கின்றனர்

இலங்கையின் அரசியலமைபபைப் பொறுத்தவரையில் - ஒற்றையாட்சியையும், நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையையும் முதனிலைப்படுத்துவதோடு - அதிகாரங்களைப் பரவலாக்குதல் என்ற விடயத்தில், எவ்விதமான முன்னேற்றகரமான அம்சங்களையும் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவானது.

தமிழ் மக்களுடைய பங்களிப்பின்றி, இணக்கப்பாடின்றி உருவாக்கப்பட்ட இந்த அரசியலமைப்பு - தமிழ் மக்களிடம் எவ்விதமான நம்பகத்தன்மையையும் கொண்டிருக்கவில்லை. மாறாக, இந்த அரசியலமைப்பு - தமிழ் மக்களை ஒடுக்குவதற்கும் இரண்டாந்தரப பிரஜைகளாக வாழ்வதற்குமே நிர்ப்பந்தித்தது.

தமிழ் மக்கள் உரிமைகளைக் கோரும்போதெல்லாம் - அதிகாரமற்ற நிர்வாகக் கட்டமைப்புக்களை வழங்கி, தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றுவதற்கு உதவிய அரசியலமைப்பினடிப்படையில் - மீண்டுமொரு ஏமாற்றத்துக்கு தாங்கள் தயாராகவில்லை என்பதைத்தான் விடுதலைப் புலிகளின் இன்றைய நிலைப்பாடு எடுத்துக்காட்டுகின்றது.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிப் பொறுப்பிலிருக்கும் சந்திரிகா குமாரதுங்கவும், தெற்கின் பேரினவாதக் கட்சிகளும், குழுக்களும் - தமிழர்களுக்கான அதிகாரமுள்ள எத்தகைய கட்டமைப்பை வழங்குவதற்கும் செயற்படுத்துவதற்கும் எதிர்ப்பையும், தடைகளையும், முட்டுக்கட்டைகளையும் ஏற்படுத்துவதற்குத் தயாராகவுள்ள சூழ்நிலையில் -

அரசியலமைப்பின் வழியாக உருவாக்கப்படும் எத்தகைய நிர்வாக அமைப்பும் எந்தநேரத்திலும் அச்சுறுத்தலுக்காளாகும் ஆபத்திலிருப்பதை எவரும் மறுக்கமாட்டார்கள்.

இந்த நிலையில் - அரசியலமைப்புக்கு அப்பாலான சகல அதிகாரங்களும் கொண்ட இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கி - அதன் மூலமாக, தேக்கமடைந்திருக்கும் சமாதான முயற்சிகளை மீளத் தொடர்வதற்கும்,

தமிழ் மக்களிடம் நம்பிக்கையைப் பெற்றெடுப்பதற்கும் அரசாங்கம் முயற்சிக்க வேண்டும்.

தமிழர் தரப்பின் நியாயமான எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் முயற்சிப்பதில்தான் - சமாதானப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகளின் பங்கேற்பதும், ரோக்கியோ மாநாட்டில் அவர்கள் கலந்து கொள்வதும் தங்கியிருக்கின்றது என்பதால்- அரசாங்கத்தின் உடனடியான, ஆக்கபூர்வமான பதில் நடவடிக்கை மிகமிக அவசியமானதொன்றாகவே அமைந்திருக்கிறது.

# அமைதிப்பேச்சு, ரோக்கியோ மாநாட்டில் புலிகள் நிச்சயமாகப் பங்குபற்றுவார்கள்!

## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் நம்பிக்கை

சமாதானப் பேச்சுவார்த்தை மற்றும் ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் மாநாடு ஆகியவற்றில் விடுதலைப்புலிகள் கலந்து கொள்வார்கள் என்று தாம் திடமாக நம்பிக்கை கொண்டுள்ளதாக அமெரிக்கா காங்கிரஸ் சபை உறுப்பினர் பிரான்ஸ் கோலன்யூனி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா பிரதிநிதிகள் சபையில் கடந்த புதன்கிழமை ஆற்றிய உரையில் அவர் இதனைத் தெரிவித்ததாக அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவும், அரசியல் ரீதியான தீர்வுகளைக் காண்பதற்கும் விடுதலைப் புலிகள்-தற்பொழுது ஏற்பட்டுள்ள சமாதானப் போச்சுவார்த்தைகளை முழுமையாகப் பயன்படுத்துவார்கள் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமென்பதில் அமெரிக்காவும், சர்வதேச சமுகங்களும் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளதாக இலங்கைத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சுற்றாடல் பேணும் தினமாக 15 நாட்கள் பிரகடனம்!

சுற்றாடல் மிகத்தீவிரமாக மாசடைந்து வருவதைத் தடுப்பதற்காகவும், மக்கள் மத்தியில் சுகாதாரத்தின் நன்மைகளை எடுத்துரைக்கும் வகையிலும் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் பதினைந்தாம் திகதிவரை உலக சுற்றாடல் தினங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தினங்களில் மக்களுக்கு - சூழல் எவ்வாறு மாசடைகின்றது, அதை மக்கள் எவ்வாறு தடுக்கலாம், சூழல் மாசடைவதால் நிலத்தடி நீரின் பாதிப்பு போன்ற கருத்தரங்குகளும், மரம் நடுகை, கொடிதினம், பதாகைகள் அமைத்தல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்படுத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

## பெண் ஊர்காவலர்கள் மீது திருமலையில் பாலியல் வல்லுறவு

### இராணுவச் சிப்பாயும், பொலிஸ்காரரும் கைது

திருகோணமலை - ஹபரண காட்டுப் பகுதியில் இரு பெண் ஊர்காவற்படையினர் - இராணுவச் சிப்பாய் ஒருவராலும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவராலும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டனர். இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

விடுமுறையில் வீடு சென்றுவிட்டுக் கடமைக்குத் திரும்பிக் கொண்டிருந்த இரு பெண் ஊர்காவற் படையினரை ஹபரண, அளுத்தோயா காட்டுப் பகுதியில் வைத்து இராணுவச் சிப்பாய் ஒருவரும், பொலிஸ் கான்டபிள் ஒருவரும் பாலியல் வல்லுறவுகுட்படுத்தினர்.

கடந்த புதன்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதனையடுத்து பொலிஸாரிடம் மேற்படி இரு பெண் ஊர்காவற்படையினரும் புகார் செய்ததையடுத்து இராணுவச் சிப்பாயும், பொலிஸ் கான்ஸ்டபிளும் கைது செய்யப்பட்டுள்ளனர்,

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புலிகள் உதவுவதில் உள்நோக்கமில்லை!

## வவுனியா அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்குப் புலிகள் உதவ மறைமுகக் காரணம் எதுவும் இல்லை. எமது மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள். அவர்கள் தென்பகுதி வெள்ளப்பாதிப்பால் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை முழுமையாகப் புரிந்துகொள்ளமுடியும் என்று விடுதலைப்புலிகளின் வவுனியா அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.

ஆறு லொறிகளில் தென்பகுதி மக்களுக்கு எடுத்துச்சென்ற உணவுப் பொருட்கள் வழங்கிய பின்னர் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். 35 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் பாதிப்புக்குள்ளான மக்களுக்காகக் கொண்டுசெல்லப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் இரத்தினபுரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவை விநியோகிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

## ஜனாதிபதி-அமைச்சர் மகேஸ்வரன் அடுத்த வாரம் சந்திக்க ஏற்பாடு!

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதியினை சந்திப்பதற்கு தான் விருப்பம் கொண்டிருப்பதாக அமைச்சர் மகேஸ்வரன் எழுதிய கடிதத்தினை ஏற்றே ஜனாதிபதி சந்திப்பிற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளார்.

இச்சந்திப்பின்போது தமிழ் அரசியல் கைதிகளின் பொது மன்னிப்பு, விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படவிருக்கும் இடைக்கால நிர்வாகம் என்பன தொடர்பாகவும் ஆராயபப்படவுள்ளது என அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

## இத்தாலி செல்ல முயன்ற 26 இந்தியர்கள் கைது!

### நீர்கொழும்பில் சம்பவம்

இலங்கையூடாக இத்தாலிக்குச் சட்டவிரோதமாகச் செல்ல முயன்ற 26 இந்தியர்களை நீர்கொழும்பு - கொச்சிக்கடைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.

மீன்பிடிப் படகுகளைப் பயன்படுத்தி இத்தாலிக்குச் செல்லவிருந்த இவர்கள் - நீர்கொழும்புக்குப் பகுதியிலுள்ள விடுதி ஒன்றில் மறைந்திருந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டோரில் 14 பேரிடம் இலங்கையில் தங்கியிருப்பதற்கான விசா இருக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தியர்களை இத்தாலிக்கு அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நபரைக் கைது செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# படகுகள் சேதமடைந்துள்ளதால் நாடுதிரும்ப முடியாத தமிழக மீனவர்

## நடவடிக்கை இன்றேல் தற்கொலை செய்வோமென மிரட்டல்

(மன்னார்)

இலங்கையிலிருந்து மீண்டும் இந்தியா திரும்ப - நீதிமன்றம் அனுமதி வழங்கியபோதும், வள்ளங்கள் உடைந்தநிலையில் இருப்பதால் நான்கு இந்திய மீனவர்கள் நாடு திரும்பமுடியாத நிலையில் உள்ளனர். நாடு திரும்ப அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிட்டால் தாம் தற்கொலை செய்துகொள்ளப்போவதாக இவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் 81 இந்திய மீனவர்கள் மன்னார் மீனவர்களால் பிடிக்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் 77 பேர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருந்தனர்.

ஏனைய நான்கு பேர் மட்டும் இந்தியா செல்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியும், தமது படகுகள் உடைந்திருப்பதால் ஆழ்கடலில் பயணிக்கமுடியாதென்பதால் நாடு திரும்பாதுள்ளனர்.

தற்போது நெசவு ஆலை ஒன்றில் தங்கியிருக்கும் இந் நான்கு மீனவர்களும் தம்மை நாடுதிரும்ப அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிட்டால் தற்கொலை செய்துகொள்ளப் போவதாக அறிவித்துள்ளனர்.

ஒரு மீனவர் ஏற்கனவே தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு ஏனையோரால் காப்பாற்றப்பட்டதாகத் தெரியவருகிறது.

அதேவேளை, இந்த மீனவர்கள் - கடற்படை மூலம் இந்தியக கடலோரக் காவற்படையிடம் நேரடியாகக் கையளிக்க இந்தியத் தூதரகத்தினூடாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுவதாகத் தெரியவருகிறது.

## வாய்க்கால்கள் திருத்தப்படாததால் நீர் வடிந்தோட வழியில்லை!

உடுவில், சங்குவேலி, கந்தரோடைப்பகுதிகளில் உள்ள குளங்கள், கழிவு நீர் வாய்க்கால்கள் பலவருடங்களாகப் பற்றைகள் நிறைந்து தூர்ந்து போயுள்ளதால், மழைகாலங்களில் நீர் வடிந்தோட முடியாதநிலையில் காணப்படுகின்றன.

நெல் விதைப்பு, அறுவடைக் காலங்களில் மழை கூடுதலாகப் பெய்யுமிடத்து, நீர் வடிந்தோட முடியாததால் விவசாயிகளும், தாழ்நிலத்தில் குடியிருப்பவர்களும் பெரிதும் கஷ்டங்களையும், நஷ்டங்களை அனுபவிப்பதாக வருத்தம் தெரிவிக்கின்றனர். இப்பகுதியூடாக அராலிக்குச் செல்லும் வழுக்கையாறும் பல வருடங்களாகத் திருத்தப்படாதிருப்பது குறிப்பிடத்தக்கது. (101)

# அழிவடைந்து சிதைந்து கிடக்கும் வளம் கொழித்த சாவகச்சேரி மண்!




தென்மராட்சியின் தலைநகராக விளங்கியது சாவகச்சேரிப் பிரதேசம் ஆகும். இது வளம் கொழிக்கும் பூமியாகவும், இங்குவாழும் மக்கள் தமக்குத் தேவையான பொருள்களைத் தாமே உற்பத்தி செய்து தேவைகளைப் பூர்த்தி செய்துவந்தனர்.

சகல கிராமங்களையும் இணைக்கக்கூடியதாகப் போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்பட்டு, நகரைச் சூழவே அரச, உள்ளூராட்சி, கூட்டுறவுச் சங்கம், வங்கிகள் போன்றன அமைந்துள்ளன.

இவ்வாறு சிறப்புப் பெற்று விளங்கிய சாவகச்சேரி நகரமானது - 2000 ஆம் ஆண்டு யுத்த நிலைமை காரணமாக அனைத்துக் குடியிருப்புகள் மட்டுமன்றி, பாடசாலைகள், அரசாங்க அலுவலகங்கள், கோவில்கள், தேவாலயங்கள் போன்றனவும் சேதமடைந்தன. 2000 ஆம் ஆண்டு யுத்தம் நடைபெற்றதன் பின்னர், இப்போது மூன்றாவது ஆண்டும் அண்மித்துவிட்டது.

சாவகச்சேரி நகரம் இராணுவத்தின் பல்குழல் எறிகணை வீச்சினாலேயே சுடுகாடு ஆக்கப்பட்டது. இறந்தவரை எரிப்பதற்கான சுடுகாடு கூட இன்று இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாக்கப்பட்டு காணப்படுகின்றது. இறந்தவரின் உடலை அடக்கம் செய்வதற்கும் இந்நிலையா என்று மக்கள் ஏங்கித் தவிக்கின்றனர்.

சாவகச்சேரியின் யுத்தநிலைமையானது - வியட்நாம் போரினை ஒப்பிடும் அளவில் காணப்படுவதாக அழிவடைந்த சாவகச்சேரி நகரின் யுத்த அழிவுகளைப் பார்வையிட்ட வெளிநாட்டவர்கள் வர்ணித்தனர்.

சாவகச்சேரி நகரினைச் சூழக் காணப்பட்ட அரச அலுவலகங்கள்- பல இன்று தனியார் கட்டடங்களிலே இயங்கிவருகின்றன. ஆனால், நகர சபை அலுவலகமோ தனது சொந்த நிதிவளத்தைப் பயன்படுத்தி எவரது நிதிவழங்கலுமின்றி, நகரசபையின் பொது நூலகக்கட்டடத்தைப் புனரமைத்து அதில் மக்களின் அத்தியவசிய தேவைகளைப் பூர்த்திசெய்து கொண்டிருக்கின்றது.


அழிந்து கிடக்கும் நீதிமன்றம்


அழிந்துள்ள தபாலகம்

நகரசபை அலுவலகம் இன்னும் திருத்த வேலைகள் செய்தவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பிரதேச செயலகத்தைப் பொறுத்தவரை அது தனியார் கட்டடம் ஒன்றிலே இயங்கி வருகின்றது. அது இன்னும் புனரமைப்புச் ,செய்யப்படவில்லை.

நீதிமன்றமும், தபாலகமும் அதேபோல் தனியார் கட்டத்திலேயே இயங்கிவருகின்றன.

சாவகச்சேரி வைத்தியசாலையானது எதுவும் பயன்படுத்த முடியாதளவில் முற்றாகச் சேதமடைநது காணப்படுகின்றது. வைத்தியசாலைக்கு எதுவித வசதிகளும் ஏற்படுத்தப்படவில்லை. இதனால் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் பெரிதும் அவலப்படுகின்றனர்.

சாவகச்சேரி நகரின் அழிவுகளை - வெளிநாட்டு அமைப்புக்களிலிருந்து பிரதமர் ரணில விக்கிரமசிங்க உட்படப் பல்வேறு அமைச்சர்கள, நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்து காலாசார அமைச்சர் மகேஸ்வரன் ஆகியோர் உட்படப் பலர் வந்து பார்வையிட்டுச் சென்றனர்.


சேதமாக்கப்பட்ட வைத்தியசாலை

இவர்கள் வந்து எமது பிரதேசத்தின் அழிவுகளைப் பார்வையிட்ட போது, மக்கள் பெரிதும் சந்தோஷத்துடன் காணப்பட்டனர். எமது பிரதேச அழிவுகளுக்கு நிதியுதவிகள் அதிகமாக வழங்கப்படும். எமது பிரதேசமும் அபிவிருத்தி அடையுமென்று பகற்கனவே கண்டார்கள். இன்று புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒருவருடத்துக்கு மேலாகியும், எமது பிரதேசம் இன்னும் அபிவிருத்தி செய்யப்படவில்லையே என்று ஏங்கித் தவிக்கின்றார்கள் எமது மக்கள். என்றுதான் இந்த நகரின மக்கள வாழ்க்கை வளம் பெறும். வைத்தியசாலை, அஞ்சல் அலுவலகம், பிரதேச செயலகம் எப்போது புத்துயிர்பெறும் என்று ஏங்கித்தவிக்கின்றனர் சாவகச்சேரி வாழ் மக்கள்.

- கஜீதன்.

## பதிவு செய்யாத வாகனங்களை பதிவு செய்வதற்கு கால அவகாசம்

1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார வாகனங்களைப் பதிவு செய்வதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் கடந்தவாரம் முதல் புதிய நடைமுறைகளை அறிவித்துள்ளார்.

புதிய நடைமுறையின்கீழ் கோரப்பட்டுள்ள ஆவணங்களைச் சமர்ப்பிப்பதில், வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் குறித்து போக்குவரதது ஆணையாளருடன் யாழ்ப்பாண வணிகர் கழகம் பேச்சுக்களை நடத்தியது.

இந்தப் பேச்சுகளுக்கமைய இம் மாதம் 30 ஆம் திகதிவரை வாகனங்களைப் பதிவு செய்வதற்குப் பழைய நடைமுறைகளையே பின்பற்றுவதென மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்ததாக வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

இதன்படி மோட்டார் வாகனங்களை விற்பனை செய்யும் கடை உரிமையாளர்களும், கொள்வனவு செய்தவர்களும் - இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாவிட்டால், உடனடியாக விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட உதவி மோட்டார் போக்குவரத்து ஆணையாளருக்கு இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பித்து, பதிவுகளைச் செய்யுமாறும், இந்தப்பதிவுகளுக்காக -

எம்.ரி.ஏ விண்ணப்பப்படிவம், விற்பனையை உறுதிப்படுத்தும் நிறுவனத்தின் கடிதத் தலைப்பு, சுங்கத்தளை நீக்க ஆவணம், இதுவரை வாகம் பதிவுசெய்யப்படாதமைக்கான காரணம் மற்றும் பதிவு செய்யப்படவில்லை என்பவற்றை உறுதிப்படுத்தும் சத்தியக் கூற்றுக் கடிதம், கொள்வனவுக்கான பற்றுச்சீட்டு, வதிவிட கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் பிரதி, முத்திரை அளவு புகைப்படம், பாஸ்போட் அளவு புகைப் படங்கள் - 02 ஆகியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் யாழ்ப்பாண வணிகர் கழகம் அறிவித்துள்ளது

## சட்டவிரோத இறைச்சி அதிகாரிகளால் அழிப்பு

குருநகர் சந்தையில் கடந்த 17 ஆம் திகதி விற்பனைக்காகப் பதுக்கிவைத்திருந்த, ஒவ்வொன்றும் அரை கிலோ எடைகொண்ட, பொதிசெய்யப்பட்ட 15 கிலோ சட்டவிரோத மாட்டிறைச்சி - பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் கண்டுபிடிக்கப்படடு அழிக்கப்பட்டன.

இதேவேளை, கடந்த 18 ஆம் திகதி பாசையூர் மற்றும் புங்கன் குளம் சந்தைகளிலுள்ள மாட்டிறைச்சிக் கடைகளில் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்ட 35 கிலோ மாட்டிறைச்சியும் - பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் கண்டு பிடிக்கப்பட்டு விற்பனை செய்தவர்களின் சம்மதத்துடன், அழிக்கப்பட்டதுடன்- விற்பனை செய்தவர்களும் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டனர் என யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

### சட்டவிரோத மின்சாரம் பெற்றோர் பிடிபட்டனா

(வல்வெட்டித்துறை)

கம்பர்மலைப் பகுதியில் பொலிஸாருடன் இணைந்து மின்சாரசபை அதிகாரிகள் சட்டவிரோத மின்பாவனையாளருக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது, சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற சிலர் பொலிஸாரால் பிடிக்கப்பட்டு பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

## செம்பியன்பற்று தேவாலய இறுதிநாள் உற்சவம் நாளை

செம்பியன்பற்றுப் புனித பிலிப்நேரியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நாளை விசேடபூசை ஆராதனைகளுடன் நடைபெறவுள்ளது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த ஆலயம் - புனரமைக்கப்பட்டு, இவ்வருட உற்சவம் வெகுசிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இவ்வாலய உற்சவம் - 10 நாட்கள் நடைபெற்று வருகின்றது. இறுதிநாள் உற்சவம் நாளை பிற்பகல் 3 மணிக்கு விசேட ஆராதனையுடன் ஆரம்பமாகி, திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். நாளை மறுநாள் அதிகாலை புனித பிலிப்நேரியார் சொரூபம் வீதியுலா வந்து, கடற்கரைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மீண்டும் ஆலயத்திற்கு கொண்டுசெல்லப்படும்.

இம்முறை யாழ்.மாவட்டத்தின் சகல பகுதிகளிலிருந்தும் பெருமளவு மக்கள் இவ் ஆலயத்துக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த உறசவத்தையொட்டி விசேட போக்குவரத்து சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17,09)

## அடிதடி சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் பல பகுதிகளிலும் அடிதடி சம்பவங்கள் சம்பந்தமான முறைப்பாடுகளின் தொகை அண்மையில் அதிகரித்துள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தினர் தெரிவித்தனர்.

முன்னர் நாளொன்றுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் பொலிஸ் நிலையத்தில் பதியப்பட்ட முறைப்பாடு, தற்போது அதிகரித்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதனடிப்படையில் ஜனவரி மாதத்தில் 30 முறைப்பாடுகளும், பெப்ரவரி மாதத்தில் 29 முறைப்பாடுகளும், மார்ச் மாதத்தில் 39 முறைப்பாடுகளும், ஏப்ரல் மாதத்தில் 46 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இம்மாதம் முதல் 21 நாட்களில் மட்டும் இத்தகைய 37 முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்துள்ளதாக யாழ். பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (சு)

## மகளை வல்லுறவுக்குட்படுத்த முயன்ற தந்தையைத் தடுத்தவர் படுகொலை

### பொலநறுவையில் சம்பவம்

(கொழும்பு)

ஹிங்கிராங்கொடப் பகுதியில் தனது மகளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்ற தந்தையைத் தடுக்கமுயன்ற மூவர் கத்திக்குத்துக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார். ஏனையோர் படுகாயமடைந்துள்ளனர்.

குற்றம் புரியமுயன்ற நபர் தடுக்க முற்பட்டோரைக் கத்தியால் தாக்கியதிலேயே ஒருவர் கொல்லப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இந்தச் சம்பவத்தின்போது, கத்திக்குத்துக்கு இலக்காகி காயமடைந்த இருவரும் பொலனறுவை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(01)

## விடைத்தாள் மதிப்பீடுகள் 27 ஆம் திகதி ஆரம்பம்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரிட்சை விடைத்தாள் மதிப்பீடு, இரண்டாம் கட்டமாக யாழ். மத்திய கல்லூரியில் எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 10 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சையின் விடைத்தாள்களுக்குப் புள்ளி வழங்கும் உதவிப் பரீட்சகராக விண்ணப்பங்களை அனுப்பி, நியமனம் பெற்றவர்கள் - பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் சகல சட்டங்களையும், ஒழுங்கு விதிகளையும், 1997 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்கப் பொதுப் பரீட்சை விதிகள் "விடைத்தாள் மதிப்பீடு சம்பந்தப்பட்ட அறிவுறுத்தல்களையும் பின்பற்றுதலுக்கு, அமைவாகத் தங்கள் பிள்ளையோ வீட்டில் வசிப்பவரோ இப்பரீட்சைக்குத் தோற்றியிருப்பின் - பரீட்சை மதிப்பீட்டு நடவடிக்கைகளிலிருந்து விலக்கப்படுவர்.

நியமனத்தை பெற்றவர்கள் அதை ஏற்காவிடின், நியமனக்கடிதத்தை உடன் திருப்பியனுப்புமாறும் பிரதிப் பரீட்சை ஆணையாளருடன் தொடர்புகொண்டு அறிவிக்குமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யூ.ஏ.எம்.விஜயசிறி அறிவித்துள்ளார். (01)



இந்தோனேஷியாவின் அசே மாநிலத்தில் நடைபெறும் கடும் போரின் மத்தியில் பொதுமக்கள் அரிசி விநியோகத்தின்போது தமக்கு வழங்கப்பட்ட மூடைகளுடன் நடந்து செல்லும் காட்சி.

# மு.க.அழகிரியால் நான் கொல்லப்படலாம்; இறப்பதற்கு முதல்நாள் கணவர் கூறினார்!

## படுகொலையான முன்னாள் அமைச்சரின் மனைவி

தி.மு.க. உட்கட்சித் தேர்தல் தகராறு காரணமாக, அழகிரி தனது அடியாட்களை ஏவிவிட்டு, எனது கணவரைப் படுகொலை செய்துவிட்டார் என்று - தா.கிருஷ்ணனின் மனைவி பத்மாவதி பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

தி.மு.க. முன்னாள் அமைச்சரான தா.கிருஷ்ணன், மதுரை கே.கே நகரிலுள்ள அவரது வீட்டருகே கடந்த 20 ஆம் திகதி அதிகாலை 6 மணியளவில், மர்மக் கும்பலால்

உலகவலம்

வெட்டிக்கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக, அண்ணாநகர் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இந்நிலையில், படுகொலை செய்யப்பட்ட தா.கிருஷ்ணனின் மனைவி பத்மாவதி -, அண்ணாநகர் பொலிஸாருககு அளித்துள்ள வாக்குமூலத்தில் கூறியுள்ளதாவது -

எனது கணவர் தா.கிருஷ்ணன் மிகவும் அமைதியானவர். எதிரிக்குக்கூடத் துன்பம் நினைக்காதவர். அவருக்கு எதிரிகள், முன்விரோதிகள் எனத் தனிப்பட்ட முறையில் எவரும் இல்லை. அரசியல் ரீதியாக மு.க.அழகிரியால்தான், எனது கணவருக்கு அவ்வப்போது இடைஞ்சல் ஏற்பட்டு வந்தது. தி.மு.க. உட்கட்சித் தேர்தலில் எனது கணவர் கிருஷ்ணனுக்கு எதிராக மு.க.அழகிரி செயற்பட்டு வந்தார்.

சிவகங்கை மாவட்டம், மதுரை தெற்கு - வடக்கு மற்றும் மதுரை மாநகர் மாவட்டங்களில், தி.மு.க. உட்கட்சித் தேர்தலை முறைப்படி நடத்த வேண்டுமென, எனது கணவர் தி.மு.க தலைமையை வலியுறுத்தினார். இது அழகிரிக்குப் பிடிக்கவில்லை. அழகிரியின் நிலைக்கு எதிராகச் செயற்படுவதால், தன் மீது அழகிரி கடுங்கோபத்துடன் உள்ளதாக எனது கணவர் பலமுறை என்னிடம் கூறிவந்தார்.

தென் மாவட்டங்களில், அழகிரி ஆதரவாளர்களைக் கட்சிப் பொறுப்புக்குக் கொண்டுவந்து, தென் மாவட்ட தி.மு.கவை கைப்பற்ற நினைக்கின்றனர். அதற்குத் தான் தடையாக இருப்பதாக அழகிரி தன் மீது கோபம் கொண்டுள்ளார் என, எனது கணவர் படுகொலை செய்யப்படுவதற்கு முதல்நாள் என்னிடம் சொன்னார்.



மு.க.அழகிரி

தென்மாவட்ட தி.மு.கவை தன் கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டுவரத் தடையாக இருக்கும் கிருஷ்ணனை, ஒழித்துக்கட்ட வேண்டுமென அழகிரி அவரது ஆதரவாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

எனவே, அவரது அடியாட்களால் எனக்கு எந்தநேரமும் ஆபத்து நேரிடலாம் என, படுகொலை செய்யப்படுவதற்கு முதல் நாள் இரவுகூட எனது கணவர் என்னிடம் கூறிவருத்தப் பட்டார்.

இதனால், எனது கணவர் கிருஷ்ணனை, அழகிரிதான் அவரது அடியாட்களை ஏவிவிட்டுப் படுகொலை செய்துள்ளார். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# அரசியல் கொலைகள் சகஜம் என்கிறார் மு.கருணாநிதி!



1956 இல், அண்ணா காலத்திலேயே கே.வி.கே.சாமி என்பவர் கொலை செய்யப்பட்டார்.

- இப்படி அரசியலில் கொலைகள் நடப்பது சகஜம் என்று, தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

பசும்பொன் தா.கிருஷ்ணன் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக, உண்மையான குற்றவாளிகளைப் பிடித்திருந்தால், அது வரவேற்கத்தக்கது. 'பாவம் ஓரிடம், பழி ஓரிடம்' என்ற நிலையிலோ, 'ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பது' என்ற நிலையிலோ, நடவடிக்கை அமையுமானால் - அது உண்மையான குற்றவாளிகளைத் தப்பிக்கவிடுவதோடு, நீதி கிடைப்பதற்கு வழி இல்லாத தடைக் கல்லாக ஆகிவிடும் என்றும் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதாவின் ஆட்சிதான், ஒரு கல்லில் இரண்டு மாங்காயை அடிக்க முற்படுகிறது. ஒவ்வொரு கட்சியிலேயும் கடந்த காலங்களில் எத்தனையோ கட்சியின் முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அரசியலில் கொலைகள் நடப்பது சகஜம்தான். தவறான முறையில் சிலர் குற்றஞ்சாட்டப்பட்டு, கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கழகத்திற்குக் கெட்டபெயர் உண்டாக்குவதற்காக தற்போது ஒரு முயற்சி நடக்கிறது என்றும் - கிருஷ்ணனின் கொலை சம்பந்தமாக கருணாநிதி தெரிவித்துள்ளார்.

அழகிரி, கருணாநிதியின் மூத்த மனைவியின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சதாமின் முன்னாள் அமைச்சுகள் அமெரிக்க நிர்வாகியால் கலைப்பு



(பக்தாத்)

ஈராக்கின் புதிய அமெரிக்க நிர்வாக அதிகாரி - முன்னாள் ஈராக் அமைச்சுக்களையும், நிறுவனங்களையும் கலைத்ததுடன், அவை சட்டவிரோதமானவை எனவும் அறிவித்துள்ளார்.

போல் பிரேமர் எனும் இந்த அமெரிக்க நிர்வாகி - சதாம் ஹுசைனின் குடியரசுக் காவற்படை, பாதுகாப்பு மற்றும் தகவற்துறை அமைச்சகம், ஈராக் ஒலிம்பிக் கமிட்டி, இராணுவ நீதிமன்றங்கள் என்பவை சட்ட விரோத அமைப்புக்கள் எனப் பிரகடனம் செய்துளார்.

ஒரு வாரத்துக்கு முன்பே, சதாமின் பாத் கட்சியைத் தடை செய்ததுடன் - அக்கட்சி உறுப்பினர்கள், அரச நிறுவனங்களில் பணிபுரிவதையும் பிரேமர் தடை செய்திருந்தார்.

இதனிடையே -

ஐ.நா.பாதுகாப்புச் சபை - ஈராக் மீதான பொருளாதாரத் தடைநீக்கம் தொடர்பாகவும், அங்கு அமெரிக்கா தலைமையிலான நிர்வாகம் தொடர்வதற்கும், ஏக மனதான அங்கீகாரத்தை நேற்று வழங்கியது.

# பாகிஸ்தானுடன் இப்போது பேச்சுகள் நடத்தமாட்டோம்

## இந்தியப் பாதுகாப்பு அமைச்சர்



ஜோர்ஸ் பெர்னாண்டஸ்

பாகிஸ்தானுடன், உடனடியாகச் சமாதானப் பேச்சு நடாத்தும் எண்ணம் ஏதும் இந்தியாவிடம் இல்லை என, இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னான்டஸ் கூறியுள்ளார். நேரம் வரும்போது பேச்சு நடக்கும் எனக் குறிப்பிட்ட அமைச்சர் - பிரிவினைவாதத் தீவிரவாதிகளுக்கு எதிராக அண்மையில் பாகிஸ்தான் எடுத்த நடவடிக்கைகளைப் பாராட்டினார்.

பாகிஸ்தான் இன்னமும் செய்ய நிறைய இருக்கிறது. எனினும், தற்போது எடுக்கும் நடவடிக்கை பாராட்டும்படி உள்ளது என அமைச்சர் பெர்னான்டஸ் கூறினார்.

### அல்ஜீரியாவில் மீட்புப்பணி தொடர்கிறது

அல்ஜீரிய நிலநடுக்கத்தினால் கட்டடங்களின் இடிபாடுகளுள் புதையுண்டுபோன ஏராளமானவர்களைத் தேடும் பணி, நேற்றும் தொடர்ந்தது.

புதன்கிழமை நடைபெற்ற நிலநடுக்கப் பேரழிவுக்காக, மூன்று நாள் துக்கதினம் அந்நாட்டில் அனுஷ்டிக்கப்பட்டது. 78 குடியிருப்புக்களைக் கொண்ட 10 மாடிக் கட்டிடம் ஒன்று இடிந்து வீழ்ந்ததிலேயே அதிகமானோர் பலியாகியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் - திறந்த வெளிகளில் மின், நீர் வசதியின்றி கடந்த இரண்டு இரவுகளைக் கழித்துள்ளனர். அல்ஜீரிய நிலநடுக்கத்தில் 1350 பேர் பலியானதாக இதுவரை கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

### ஜி-8 வெளியுறவு அமைச்சர்கள் பிரான்ஸில் கூடுகின்றனர்

ஈராக் போர் தொடர்பான கடும் கருத்து வேறுபாடுகளின் மத்தியிலும், பிரான்ஸில் நேற்று ஜி - 8 எனும் தொழில்வள நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் ஆரம்பமானது.

ஈராக் போர் தொடர்பாக, கடும் கருத்து வேறுபாடு கொண்ட அமெரிக்க - பிரான்ஸ் அமைச்சர்கள் நேற்றுச் சந்தித்துக்கொண்டனர். இம்மாநாட்டில், அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும் கலந்துகொள்ளவுள்ளார்.

# சீன பாதுகாப்பு நிறுவனம் மீது அமெரிக்கா தடை உத்தரவு!

ஈரானுக்கு இரகசியமான முறையில் ஏவுகணை தொழில்நுட்பத்தை வழங்கியதாகக் குற்றஞ்சாட்டி, சீன தொழில்நுட்ப நிறுவனமொன்றிற்கு எதிராக, அமெரிக்கா தடை நடவடிக்கையை அமுல்செய்துள்ளது.

இந்தத் தடையால், சீனாவின் பாதுகாப்பு, தொழில்நுட்ப நிறுவனமான **Norinco**, அடுத்த இரண்டு வருடங்களுக்கு, சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆயுத ஏற்றுமதியை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

# எவரெஸ்ட்டில் வேகமாக ஏறி நேபாள இளைஞர் சாதனை!

'எவரெஸ்ட்' மலைச்சிகரத்தில் குறுகிய நேரத்தில் ஏறி, 25 வயதான நேபாள மலை ஏறும் இளைஞன், சாதனை ஒன்றைப் படைத்துள்ளார். 12 மணித்தியாலம் 45 நிமிடங்களில், பெம்பாடோர்ஜி என்ற இந்த இளைஞன் - 'எவரெஸ்ட்' சிகரத்தைத் தொட்டுள்ளார். இத்தகைய மலையேற்ற நிகழ்வுகள், முன்பு - நாட்கணக்கில் சென்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்றுக்காலை - பெரும் கரகோஷமும், கூச்சலும் 'எவரெஸ்ட்' மலையின் அடிவார மலையேற்ற முகாமில் காணப்பட்டது. பெம்பாடோர்ஜி என்ற இந்த நேபாள இளைஞனே, உலகின் உயர்ந்த மலையான 'எவரெஸ்ட்டில்', மிக வேகமாக ஏறிய மனிதன், என்ற செய்தி கிடைத்ததும் அவரின் சகாக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

இவர் - கடும் பனியின் மத்தியில், இரவிரவாக மலை ஏறியதாகக் கூறப்படுகிறது.



எவரெஸ்ட் சிகரம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# யாழிலிருந்து கடலுணவுகள் ஏற்றுமதி; தளபதி சூசையுடன் சமாசம் சந்திப்பு!

## பல முக்கிய விடயங்களும் ஆராயப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பிடிக்கப்படுகின்ற கடலுணவைத் தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பாக- கடற்தொழிலாளர் சமாசத் தலைவர் தவரட்ணம், விடுதலைப் புலிகளின் கடற்படைத் தளபதி கேணல் சூசையைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை வன்னியில் நடைபெற்ற இச்சந்திப்பில், யாழ். குடாநாட்டில் கடற்தொழில் சம்பந்தமான பல முக்கிய விடயங்கள் பற்றி ஆராயப்பட்டது.

இதில், யாழ். குடாநாட்டில் பிடிக்கப்படுகின்ற - இறால், கணவாய் போன்ற கடலுணவுகளை கடற்தொழிலாளர் சங்கம், சமாசம் ஆகியவற்றினூடாகக் கொள்வனவுசெய்து, அவற்றினைக் கொழும்புக்கு கொண்டுசென்று, சந்தைப்படுத்துவதற்குத் தடையாக அமைந்துள்ள போக்குவரத்துப் பிரச்சினைகள் பற்றி மிக முக்கியமாகப் பேசப்பட்டது.

அத்துடன், மீன்களைக் கொள்வனவு செய்து ஏற்றுமதி செய்யும் இடைத்தரகர்களினால் கஷ்டப்படும் மீனவர்கள், சுரண்டலுக்கு உட்படாமல் - நேரடியாகவே பயன்பெறுதல், மீனவர்கள் பிடிக்கின்ற மீன்களை, இனி மீனவர் சங்கங்களே கொள்வனவு செய்தல், ட்றோலர் போன்றவற்றைப் பயன்படுத்தி பாரியளவில் கடற்தொழில் செய்யும் மீனவர்களால் சிறிய அளவில் மீன்பிடித் தொழில் செய்பவர்கள் பாதிக்கப்படுவதை நிறுத்துதல் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றியும் ஆராயப்பட்டது.

இதேவேளை - கடலுணவுகளைக் கொழும்புக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பாக, இராணுவத்தின் உதவியினையும் நாடியுள்ளதாக கடற்தொழிலாளர் சமாசத் தலைவர் தெரிவித்தார். (ரா)

சந்திரிகா + ஜே.வி.பி



நன்றி-யாழ்.இணையத்தளம்

### பேச்சுக்கள் முறியவில்லை; பீற்றர்ஸன் அறிவிப்பு

(பிரஸல்ஸ்)

இலங்கையில் நடைபெறும் சமாதானப் பேச்சுக்களில் முறிவு ஏற்படவில்லை, முன்னேற்றங்கள் ஏற்படுவதாக நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் தெரிவித்துள்ளார்.

பெல்ஜியத்தில் கடந்த புதன் கிழமை நடந்த, பெல்ஜியம் மற்றும் நோர்வே நாடுகளிடையேயான கருத்தரங்கு ஒன்றில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் சமாதான முயற்சிகள் குறித்து, இம் மாநாட்டில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் நீண்டநேரம் விளக்கமளித்தார்.

### இடைக்கால நிர்வாகம் குறித்து

## பிரிட்டிஷ் தூதுவரிடம் கூட்டமைப்பு விபரிப்பு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தவேண்டியதன் அவசியம் குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரித்தானியப் பதில் தூதுவருக்கு எடுத்துரைத்துள்ளனர்.

வட - கிழக்கில் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கையாளுவதற்கு இவ்வாறான அதிகாரக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டியது மிக அவசியமாகும் என்றும், இதற்கு இராஜதந்திர ரீதியாக - இலங்கை அரசுக்கு பிரித்தானிய அரசு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டனர்.

மேற்படி அதிகாரங்களையுடைய தனியான நிர்வாகக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தைத் தாம் உணர்ந்துகொள்வதாக, பிரித்தானியப் பதில் தூதுவர் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

## இரத்தினபுரியில் உதவிப்பொருள் புலிகளால் நேரடியாக விநியோகம்

(கொழும்பு)

வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட இரத்தினபுரி மக்களுக்கான உதவிப் பொருட்கள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளால் வழங்கப்பட்டது.

பிரதேச செயலர் மாலினி பிரேமரத்தினா ஊடாக இந்தப் பொருட்கள் மக்களுக்கு வழங்கப்பட்டன.

அரசியற்துறை நடுவகப்பணியகத்தைச் சேர்ந்த அன்பரசன், வவுனியா அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் மேற்படி உதவிப் பொருட்களை மக்களுக்கு வழங்கினர்.

இதேவேளை -

மலையகப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பொருட்களை நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா நேற்று வழங்கினார்.

உதவிப் பொருட்களை வழங்குவதற்காகச் சென்ற விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள், இன்று வன்னிக்குத் திரும்புவர் எனத் தெரியவருகின்றது. (01)

## புலிகளால் கடற்படை சிப்பாய் தம்பலகாமம் பகுதியில் கைது!

திருகோணமலை - தம்பலகாமம் பகுதியில், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஆயுதங்களுடன் நுழைந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர், விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

கடந்த பன்னிரண்டாம் திகதி நடைபெற்ற இச்சம்பவத்தின்போது, கைதுசெய்யப்பட்ட கடற்படைச் சிப்பாய், தற்போது தமிழீழ காவற்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றார்.

இவ்விடயம் தொடர்பாக, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கும் விடுதலைப் புலிகளால் தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றது. (10,04,05)

## இடைக்கால நிர்வாகக்...

முள்ள தற்போதய நிர்வாகக் கட்டமைப்பை மேலும் வலுவாக்கி, எவரும எதிர்த்துச் செயற்படமுடியாத நிலையை உருவாக்கிவிடும்.

ரோக்கியோ மாநாட்டில் புலிகள் பங்கேற்க மாட்டார்கள் என்பதற்காக, அவர்களைச் சமாளிக்க அரசாங்கம் இவ்வாறு நடந்துகொள்வது, அவர்கள் மேலாதிக்கம் செலுத்தும் நிலையை உருவாக்கிவிடும்.

ஜே.வி.பியும், தேசிய நலனை விரும்பும் ஏனைய கட்சிகளும், குழுக்களும் இடைக்கால நிர்வாகத்தைக் கடுமையாக எதிர்ப்பதாகவும் கலாநிதி சரத் அமுனுகம மேலும் தெரிவித்தார்.

அரசியலமைப்புக்கு முரணாக இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்தக்கூடிய அதிகாரம் பிரதமருக்கு இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை - அதிகாரப் பகிர்வு எந்தவகையிலும் மேற்கொள்ளப்பட்டாலும், அதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழேவைக்க [illegible]

ளது என்றும் -

புலிகளின் இந்தக் கோரிக்கை தொடர்பாக, ஜனாதிபதி சந்திரிகா கவனமாக ஆராய்ந்து விரைவில் அறிக்கை ஒன்றை வெளியிடலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இடைக்கால நிர்வாகக் கோரிக்கையைத் லங்கா சமசமாஜக் கட்சி நிராகரிப்பதாக அக்கட்சியின் பிரமுகர் பட்டி வீரக்கோன் தெரிவித்தார். இது ஆபத்தானது எனக் கருத்து வெளியிட்டுள்ள அவர் - புலிகளின் தந்திரோபாய நடவடிக்கைகளை, அரசும் எதிர்க்கட்சிகளும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

### கோரிக்கை...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான கருத்துக்களை, அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது. புலிகளின் இந்தக் கருத்து, சமாதான முயற் [illegible]

## ரோக்கியோ மாநாட்டுக்கு முன் அரசு - புலிகள் உடன்பாடு தேவை

### ஜப்பானிய அரசு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்திக்கும் புனரமைப்புக்கான ரோக்கியோ மாநாடு திட்டமிட்டபடி நடத்தப்படவேண்டுமென்று, ஜப்பான் அரசாங்கம் அறிவித்துள்ளது என்று கொழும்பிலுள்ள அந்நாட்டுத் தூதரகம் அறிவித்துள்ளது.

[illegible] ரிக்கப்படத்தக்க உடன்பாட்டுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் உடனடியாக வருவதற்கு முயற்சிகள் எடுக்கவேண்டுமென்றும் ஜப்பானிய அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

இந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்த உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய நாடு [illegible]

### சிகிச்சை முடித்து பால்ராஜ் திரும்பினார்

(கிளிநொச்சி)

இருதய சிகிச்சைக்காக சிங்கப்பூர் சென்ற விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் பால்ராஜ் சிகிச்சை முடித்துக் கொண்டு கிளிநொச்சி திரும்பினார்.

நேற்றுக் காலை. கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தில் உலங்குவானூர்தியில் வந்திறங்கிய பால்ராஜை, விடுதலைப் புலிகளின் [illegible]

இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்தக்கூடிய அதிகாரம் பிரதமருக்கு இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை - அதிகாரப் பகிர்வு எந்தவகையிலும் மேற்கொள்ளப்பட்டாலும், அதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழேவைக்க வேண்டும் என்றும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இந்த விடயம் குறித்து - ஜனாதிபதியுடன் பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டில் பொதுஜன ஐக்கிய முன்னணி உள்

## கோரிக்கை...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான கருத்துக்களை, அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது. புலிகளின் இந்தக் கருத்து, சமாதான முயற்சியை எந்த வகையிலும் பாதிக்கமாட்டாது. சமாதான முயற்சிகள் நடைபெறும் வேளைகளில், இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பு. இதனை ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் ஆராய்ந்து உரிய பதிலை வழங்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். (04)

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்திக்கும் புனரமைப்புக்கான ரோக்கியோ மாநாடு திட்டமிட்டபடி நடத்தப்பட வேண்டுமென்று, ஜப்பான் அரசாங்கம் அறிவித்துள்ளது என்று கொழும்பிலுள்ள அந்நாட்டுத் தூதரகம் அறிவித்துள்ளது.

மாநாடு உரிய திகதியில் நடத்தப்படாவிட்டால், நீண்டநாட்களாகக் கஷ்டப்படும் இலங்கை மக்களுக்கு அது பேரிழப்பாக அமையுமென்றும் ஜப்பானிய அரசாங்கம் கூறியுள்ளது.

ரோக்கியோ மாநாட்டுக்கு முன்னதாகச் சில முக்கிய விவகாரங்கள் குறித்து, அரசாங்கத்துடன் அங்கீகரிக்கப்படத்தக்க உடன்பாட்டுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் உடனடியாக வருவதற்கு முயற்சிகள் எடுக்கவேண்டுமென்றும் ஜப்பானிய அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

இந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்த உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய நாடுகள் அமைப்பு என்பவற்றுக்கும் ஜப்பானிய அரசாங்கம் நன்றியைத் தெரிவித்துள்ளது.

## கனேடியத்...

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் திருமதி பலேரி றேமன்ட் மற்றும் அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின்போது - புலிகள் அமைப்பில் சிறுவர்களைச் சேர்த்தல் மற்றும் வரி அறவிடுதல் பற்றிய குற்றச்சாட்டுக்கள், முஸ்லிம்களின் பிரச்சினை ஆகியவை தொடர்பாக பேசப்பட்டபோது, புலிகள் இதற்கு உரிய விளக்கமளித்தனர்.

இச்சந்திப்பில் - தாம் திருப்தியடைவதாக கனேடிய உயர்ஸ்தானிகர் பேச்சுக்கள் முடிவில் தெரிவித்தார்.

மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் பால்ராஜ் சிகிச்சை முடித்துக் கொண்டு கிளிநொச்சி திரும்பினார்.

நேற்றுக் காலை கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தில் உலங்கு வானூர்தியில் வந்திறங்கிய பால்ராஜை, விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் பலர் வரவேற்றனர்.

## தொண்டராசிரியர்...

தாமதப்படுத்தியது. தற்போது - அமைச்சரவையின் முடிவுக்கமையவே திறைசேரி அனுமதி வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## காரைநகர்...

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கடற்க்ண்காணிப்புப் பிரிவுத் தலைவர் போல் எரிக்கிடம் பொது மக்கள் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டார்.

இதேவேளை - சாவகச்சேரியிலிருந்து கடந்த புதன்கிழமை, ஆர்.எம்.கே.ஜி.என்.கே.ரட்ணாயக்க என்ற இராணுவச் சிப்பாய் காணமற்போயுள்ளதாகவும் படைத்தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (சு,52,09)


NEW SCIENCE HALL

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

A/L 2004

☆ DAY CLASS ☆

(A/L 2003 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களிற்கு)

★ எமது வழமையான ஆசிரியர் குழு ★

ஆரம்பம்

01.06.2003 ஞாயிறு காலை 8.00

(சி-946)


## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.90 | 97.37 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 157.95 | 159.43 |
| 1 யூரோ | 112.81 | 114.20 |
| 1 சுவிஸ் பிராங் | 74.21 | 75.58 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 63.17 | 64.35 |
| 1 ஜப்பானிய யென் | 00.82 | 00.83 |
| 1 சவூதி றியால் | 25.93 | 25.93 |


இப்பத்திரிகை இல.287, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.05.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.